விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 08 வியாழக்கிழமை (21.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 33




# தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் மேலும் அதிகரிக்கும் சாத்தியம்


## பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நாம் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும், நடமாடும் கண்காணிப்புக் குழுவையும் பயன்படுத்தவுள்ளோம் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-கருணா பிளவுக்கு ஐ.தே.க. பொறுப்பில்லை!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து கருணா வெளியேறுவதற்கு தாம் பின்னால் இருந்து செயற்பட்டதாக வெளியாகும் தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார். ஐரோப்பாவில் தளத்தை கொண்டுள்ள தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் 2005ஆம் ஆண்டு தமது தோல்விக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே (16ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் கோப்ரல் படுகாயம்

(கொழும்பு)

காங்கேசன்துறை இராணுவத்தளத்தில் இராணுவச்சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் கோப்ரல் தர அதிகாரி படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, காங்கேசன்துறை படைத்தளத்தில் நடைபெறவிருந்த இராணுவத்தினரின் அணிவகுப்பு பயிற்சி நடவடிக்கையின்போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மக்களை காணவில்லை; இராணுவத்தினரே அதிகமாக உள்ளனர்!

### த அசோசியட் பிரஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரம் தற்போது இராணுவ முகாம்களினால் நிரம்பிய நகரமாகவே காட்சி தருகிறது அங்கு மக்களை காணமுடியவில்லை. சில நூறுமீற்றர் தூரங்களுக்கு ஒரு முகாம் என கிளிநொச்சி இராணுவத்தினரால் நிரம்பியுள்ளது.

படையினரின் சுற்றுக்காவல் நடவடிக்கைகளும் அங்கு அதிகம் என த அசோசியட் பிரஸ் செய்தி நிறுவனம் தனது செய்தி ஆய்வில் தெரிவித்துள்ளது.

அதன் முழு வடிவம் வருமாறு, கிளிநொச்சியில் பெருமளவான நெல்வயல்கள் களைகள் மூடி கிடக்கின்றன ஆடுகளும் மாடுகளும் காணாமல் போயுள்ளன. உழவு இயந்திரங்களையும் மோட்டார் சைக்கிள்களையும் அங்கு காணமுடியவில்லை. கட்டிடங்களும் வீடுகளும் குண்டுவீச்சுக்களால் நிர்மூலமாகிகற்குவியல்களாக கிடக்கின்றன.

போர் நிறைவுபெற்று 8 மாதங்கள் கடந்த நிலையில் முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தமது (15ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு எஸ்.எம்.எஸ்ஸில் அச்சுறுத்தல்

(கொழும்பு)

எதிர்க்கட்சி பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு எதிராக கொலை மிரட்டல் மற்றும் அவதூறு ஏற்படுத்தும் தொலைபேசி தகவல்கள் மற்றும் குறுந் தகவல்களை அனுப்புதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க் கட்சியின் பொது வேட்பாளரின் ஊடகபிரிவு குற்றம் சாட்டியுள்ளது.

பொன்சேகாவுக்கு எதிராக நேற்று அதிகாலை தொடக்கம் (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பெருமளவானோருக்கு வாக்காளர் அட்டை கிடைக்கவில்லை

### கபே அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு வடபகுதியில் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லை என கபே அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

சுமார் 7 இலட்சம் வாக்காளர்களில் 2 இலட்சம் பேருக்கு மாத்திரமே வாக்காளர் அட்டைகள் கிடைக்க பெற்றுள்ளது என கபே அமைப்பின் ஊடக இணைப்பதிகாரி கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இறுதியாக இடம் பெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகள் காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் சிக்கல் நிலைமையே ஏற்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் இறுதி முடிபு நேரடியாக ஒலிபரப்பு இல்லை

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதி தேர்தல் இறுதி முடிபு பிரகடனம் நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படமாட்டாது எனவும் பதிவு செய்யப்பட்டு பின்னரே அறிவிக்கப்படுமெனவும் தேர்தல் ஆணையாளர் நேற்று இடம்பெற்ற சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் தேர்தல் முடிபுகள் உடனுக்குடன் வெளியிடப்பட்டன. எனினும் இம்முறை இறுதிமுடிபு மட்டுமே அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச-5)




## பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு பீக்கொன் (BEACON) கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 800பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பினை உறுதிசெய்தல் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பங்குகொள்ளும் 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் பட்டம் பெற்றவர்கள் தங்களின் பட்டம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் கிராம அலுவலரின் நற்சான்றிதழ் பத்திரம் என்பவற்றை ஒப்படைத்து தங்களுக்கான வேலை வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (சு)





இலங்கை வங்கியில் முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற வேலாயுதபிள்ளை ஞானேதரனுக்கு இலங்கை வங்கித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற சேவை நயப்பு விழாவில் ஞானேதரன் துணைவியார் சகிதம் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.


JFHL

## சுகவாழ்வுக்கான பயணம்
## JOURNEY FOR HEALTHY LIFE

### அடிப்படை சுகாதார மருத்துவ கற்கைநெறி

நோக்கம்:- அடிப்படை சுகாதார மருத்துவ அறிவையும் செயற்றிறன்களையும் பெற்றிருத்தல்

அடிப்படை தகைமை:- G.C.E O/L சித்தியடைந்திருத்தல்

பயிற்சிக் காலம் :- 6 மாதம் (வார இறுதி நாட்கள்)

பயிற்சிக் கட்டணம்:- ரூபா 5000.00

விண்ணப்ப முடிவுத் திகதி:-29.01.2010

அனுப்ப வேண்டிய முகவரி:- இணைப்பாளர்
3 ஆம் ஒழுங்கை,பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

- இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சுகாதார துறையில் தொழில்வாய்ப்பு உள்ளது.
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மருத்துவ அறிவையும் திறன்களையும் பெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொலைபேசி- 021 321 6436
0776203797

இணைப்பாளர்.

(379)



## அரசாங்க அறிவித்தல்

### தேர்தல் கடமைகளுக்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்

எதிர்வரும் 26.01.2010ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலில் கடமையாற்றவுள்ள வலயத்தெரிவத்தாட்சி அலுவலர்களின் பாவனைக்கென இரட்டை பயன்பாட்டு வாகனங்கள் அல்லது பதின்நான்கு (14) இருக்கைகளுக்கு மேற்படாத வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளது. எனவே தங்களது வாகனங்களை வாடகைக்கு விடுவதற்கு விரும்பும் வாகன உரிமையாளர்கள் தமது விண்ணப்பங்களை பின்வரும் நிபந்தனைக்கு அமைவாக சமர்ப்பிக்கமுடியும்.

**நிபந்தனைகள்**

- வாகன பதிவுச்சான்றிதழ் விண்ணப்பதாரியின் பெயரில் இருத்தல் வேண்டும்.
- 2010ஆம் ஆண்டுக்கான வாகனவரி அனுமதிப்பத்திரம்.
- வலுவிலுள்ள காப்புறுதி சான்றிதழ்.
- வாகனத்தை செலுத்துவதற்கான வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்.
- வாகனம் பொறிமுறை ரீதியில் சிறந்த நிலையில் இருத்தல் வேண்டும்.
- வாகனத்தின் இருக்கைகளும், அதன் தலைவிளக்குகளும் (Head Light) பயன்படுத்தக்கூடிய நிலையில் இருத்தல் வேண்டும்.
- வாகனம் பயணம் செய்யும் தூரத்தை கணிப்பிடக்கூடிய தூரமானி இயங்கு நிலையில் இருத்தல் வேண்டும். ( Meter Reading)

**ஒரு கிலோமீற்றருக்கான கட்டண விபரம்**

- எட்டு (8) இருக்கைக்கு உட்பட்டது - பெற்றோல் வாகனம் -40/=
- எட்டு (8) இருக்கைக்கு உட்பட்டது - டீசல் வாகனம் - 34/=
- தாமதமாகும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 15/= வீதம் கட்டணம் வழங்கப்படும்.
- எட்டு (8) முதல் இருபது (14) இருக்கைக்கு உட்பட்டது - பெற்றோல் வாகனம்-46/=
- எட்டு (8) முதல் இருபது (14) இருக்கைக்கு உட்பட்டது - டீசல் வாகனம் - 39/=
- தாமதமாகும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 25/= வீதம் கட்டணம் வழங்கப்படும்.

**குறிப்பு:-** சேவைக்கு அமர்த்தப்பட்டு பயன்படுத்தப்படாது தரித்து நின்றால் அதற்காக ஆகக்குறைந்து 50 கிலோமீற்றருக்கான கட்டணம் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் 22.01.2010ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னதாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) /உதவி ஆணையாளர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அவர்களிடம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

க.கணேஷ்
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ். மாவட்டம்.

(C-4298)


## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திக்க ஜனாதிபதி மகிந்த விருப்பம்

### நிபந்தனை விதிப்பால் சந்திப்பு தோல்வி



ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவை பெற்றுக் கொள்ளும் முகமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திப்பதற்கு மகிந்தராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிபடைந்துள்ளதாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த சில தினங்களாக சந்திரிகா குமாரதுங்கவை சந்திப்பதற்கு பல முயற்சிகளை மகிந்த மேற்கொண்டிருந்தார். ஆனால் அவை எவையும் வெற்றி பெறவில்லை.

அதனை தொடர்ந்து சந்திரிகாவின் ஆதரவுகளை பெறுவதற்காக அமைச்சர் அலவி மௌலானா மற்றும் மூத்த பௌத்த துறவி ஆகியோரையும் அவர் சந்திரிகாவிடம் அனுப்பியிருந்தார்.

ஆனால் மகிந்தவை சந்திப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்த சந் திரிகா அதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ மூன்று நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்திருந்தார்.



முன்னாள் பிரதம மந்திரிகளான எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கு அஞ்சலி செலு த்த வந்த ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக் குதலுக்கு மன்னிப்பு கோரவேண்டும்.

ஊழல்கள் மற்றும் அதிகார முறைகேடுகளை நிறுத்துவதாக பகிரங்க அறிக்கை வெளியிட வேண்டும்.

லசந்த விக்கிரமதுங்க உட்பட ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மீதான விசாரணைகள் தொடர்பாக பகிரங்க அறிக்கையை வெளியிட வேண்டும்.

போன்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் சந்திரிகாவின் இந்த கோரிக்கைகளை ஜனாதிபதி நிறைவேற்ற முடியாது உள்ளதனால் அவரின் சந்திப்பு முயற்சிகள் தோல்வியில் முடிபடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-5)

## வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவனம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் வன் முறைச் சம்பவங்களில் இதுவரையில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஒன்றியத்தின் வெளி விவகார பிரதிநிதி கெதரீன் எஸ்டன் தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்களின் காரணமாக ஏற்கனவே உயிரிழப்புக்கள் மற்றும் காயமடைதல் சம்ப வங்கள் பதிவாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமானதும் அமைதியானதுமான முறையில் தேர்தல் நடத்தப்படக் கூடிய சூழலை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

போட்டியிடும் சகல தரப்பினரும் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பில் இதுவரையில் 700முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (சு-5)


## தவறிவிட்டது

அம்மன் றோட்டிலிருந்து திருநெல்வேலிச் சந்திக்கிடையில் 18.01.2010 காலை 6.45-7.10 மணியளவில் எனது வேதாகமம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

347, நாவலர் றோட்,
சீயோன் தேவாலய காரியாலயம்,
யாழ்ப்பாணம்.
Tel:- 077 5386262


## எழில் நயம் காட்சியறை திறப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய லங்கா வோல்டைல் மற்றும் லங்கா டைல்ஸ் நிறுவனங்களின் யாழ்ப்பாணக் காட்சியறை இன்று காலை 10மணிக்கு இல. 85, ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக் கப்படுகின்றது.

லங்கா வோல்டைல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மகேந்திர ஜெயசேகர காட்சியறையை திறந்து வைக்கிறார். (சு)

# இன்று ஒரு தகவல்

## பாடம் கற்பிக்கும் முறை

ஓர் ஊரில் ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் குருகுலத்தைப் போன்று பாடம் சொல்லிக் கொடுப்பது வழக்கம்.

ஒருநாள் மூன்று மாணவர்கள் அவரைத் தேடிவந்தார்கள்.

"என்ன பாடம் கற்றுக்கொள்ளப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

ஒருத்தன் ''இலக்கணப்பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்றான். இன்னொருத்தன் ''சோதிடம் கற்றுக் கொள்ளவேண்டும்'' என்றான். மற்றையவன் ''தர்க்கசாஸ்திரம் கற்றுகொள்ளவேண்டும்'' என்றான்.

சரி என்று சொல்லி இவர் அந்த மூன்று பேருக்கும் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்.

எல்லாம் வெவ்வேறு பாடங்கள் ஆனபடியால் மூன்று பேருக்கும் ஒரே நேரத்தில் பாடம் சொல்லிக் கொடுக்க முடியாது. அதனால் இலக்கணப் பாடம் படிப்பவன் வந்தால்... இவர் பல்லைத் தேய்த்துக் கொண்டே அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாராம். இவனும் அவருக்குப் பின்னாடியே போய் அவர் சொல்லச் சொல்லக் குறிப்பு எடுத்துக் கொள்ளவேண்டும். அதன் பின் உட்கார்ந்து படிக்கவேண்டும். ஏதாவது சந்தேகம் வந்தால் மறுநாள் கேட்கவேண்டும்.

சோதிடப் பாடம் கற்றுக் கொள்பவன் வந்தால்... துணிமணிகளைத் துவைத்துக் கொண்டே அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாராம். அதற்கு மத்தியில் இவன் குறிப்பு எடுத்துக் கொள்ளவேண்டும். அதன்பின் உட்கார்ந்து படிக்கவேண்டும்

ஆனால் தர்க்கசாஸ்திரம் படிக்க வருபவனுக்கு மட்டும் அருகில் உட்காரவைத்து கவனமாகச் சொல்லிக் கொடுப்பாராம். இப்படித் தினமும் நடந்து கொண்டிருந்தது.

இதை அந்த ஆசிரியரின் மனைவி கவனித்தார். அவருக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. அதனால் அவரிடம் நேரடியாகவே கேட்டார்.

''இதோ பாருங்க... மூன்று பேரும் உங்களுடைய மாணவர்கள் தானே. அப்படி இருந்தும் ஏன் இந்தப் பாகுபாடு. இரண்டு பேருக்கு அலட்சியமாகச் சொல்லிக் கொடுக்கிறீர்கள். ஒருத்தருக்கு மட்டும் கரிசனையோடு சொல்லிக் கொடுக்கிறீர்கள். இது நியாயமா?'' என்று கேட்டார்.

அதற்கு அவர் ''இதோபார்... இதை நான் உனக்கு விளக்கிச் சொல்வதைவிட... நீயே புரிந்து கொள்ளும் படி செய்கிறேன். கொஞ்சம் பொறு'' என்றார்.

மறுநாள் காலை ஆசிரியர் மனைவியைக் கூப்பிட்டார்.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் மூன்று மாணவர்களும் வந்து சேர்ந்துவிடுவார்கள். அவர்கள் வந்தவுடன் நான் சொல்லும் இந்த வாக்கியத்தை அப்படியே அவர்களிடம் சொல்லிவிடு'' என்றார்.

"சரி சொல்கிறேன். என்ன சொல்ல வேண்டும்?'' என்றார்.

"குருவின் காதில் ஓர் ஓணான் புகுந்துவிட்டது... அதனால் அவர் மாண்டுவிட்டார்! இதுதான் நீ சொல்ல வேண்டியது'' என்றார்.

அந்த அம்மாவும் இதை கவனமாக மனதில் நிறுத்திக் கொண்டார். சிறிது நேரத்தில் இலக்கணப்பாடம் படிக்கும் மாணவன் வந்து சேர்ந்தான்.

இவர் அந்த வாக்கியத்தைச் சொன்னார்.

"குருவின் காதில் ஓர் ஓணான் புகுந்துவிட்டது. அதனால் அவர் மாண்டுவிட்டார்.''

இதைக் கேட்டதும் அவன் என்ன செய்தான் தெரியுமா? அந்த வாக்கியத்தில் ஏதோ இலக்கணப்பிழை இருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. உடனே ஓடிப்போய் ஒரு புத்தகத்தைப் புரட்டி அதில் விளக்கம் தேட ஆரம்பித்தான்.

அடுத்ததாக சோதிடம் கற்பவன் வந்தான். அவனிடமும் அந்த வாக்கியத்தைச் சொன்னார்.

அவன் சிறிது நேரம் யோசித்துவிட்டு பின்

'' இப்பொழுது நடக்கிறது சனி தெசையாக இருந்தால் நீங்கள் சொல்வது போல் நடப்பதற்கு வாய்ப்புண்டு. ஆனால் குரு தெசையில் அப்படி நடப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று சொல்லி குருவின் ஜாதகத்தைத் தேட ஆரம்பித்தான்.''

மூன்றாவதாக தர்க்கம் படிப்பவன் வந்தான்.

இந்த அம்மா அந்த வாக்கியத்தைச் சொன்னார்.

உடனே அவன் '' நீங்க சொன்னது நடந்திருக்கவே முடியாது என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

அதற்கு அவன் ''குருவின் காதுத்துளை சிறியது. ஓணான் அதைவிடப் பெரியது. அப்படியிருக்கும் போது ஓணான் எப்படி அவரது காதுக்குள் நுழைந்திருக்க முடியும்? அப்படியே ஒரு ஓணான் நுழைந்து குரு இறந்து விட்டார் என்று நினைத்துக் கொள்வோம்.

இப்படித் தெளிவாக என்னிடம் அதை நீங்கள் சொல்லியிருக்க முடியாது. உங்களுடைய முகத்தில் சோகம் இல்லை. அழுகை வரவில்லை. அதனால் இப்ப நீங்கள் சொன்னது நடந்திருக்க முடியாது. ஆகவே குருவே இனியும் என்னைச் சோதிக்காமல் தயவு செய்து வெளியே வாருங்கள்'' என்றான்.

ஆசிரியர் சிரித்துக் கொண்டே வந்தார்.

அதன் பின் மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

"இப்பொழுது புரியுதா உனக்கு...'' தர்க்க சாஸ்திரத்தின் மகிமை?

இடம், பொருள், ஏவல் அறிந்து பேசக் கூடிய புத்திக்கூர்மை தர்க்கம் படிப்பவர்களுக்கு உண்டு என்றார்.

ஆகவே எந்தப் பாடத்தை எப்படிச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான விடயம்.

ஒவ்வொரு பாடத்தை சொல்லிக் கொடுப்பவர்களுக்கும் ஒரு இயல்பான குணம் அமைவதுண்டு.

ஒரு இலக்கண ஆசிரியர் இருந்தார். அவருக்கு ஒரே பையன். பெரிய மனிதர் ஒருவரை விருந்துக்கு அழைத்திருந்தார் அந்த ஆசிரியர்.

அவர் வந்து சாப்பிட்டுவிட்டுப் போனார்.

அதன் பின் அந்தப் பையன் அப்பாவிடம் கேட்டான்:

"அவன் மூஞ்சி ஏன் குரங்கு மாதிரி இருக்கு?'' என்று.

அப்பாவுக்கு கோபம் வந்துவிட்டது.

உடனே பையனைக் கண்டித்தாராம்.

''பெரியவர்களைப் பற்றி அப்படியெல்லாம் மரியாதைக் குறைவாகப் பேசக் கூடாது 'அவன் மூஞ்சி' என்று சொல்லக்கூடாது. 'அவர் முகம்' என்று சொல்லு... அதுதான் சரி'' என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## காணி மாவட்டப் பதிவக பணிகள் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பணிகளை முன்னிட்டு காணி மாவட்டப் பதிவகத்தின் பணிகள் யாவும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 27ஆம் திகதி புதன் கிழமை வரை இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மீண்டும் 28ஆம் திகதி வியாழக்கிழமை முதல் வழமை போல் சகல பணிகளும் இடம் பெறும் எனவும் யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளரும் காணிப் பதிவாளருமான பி. பிரபாகர் அறிவித்துள்ளார். (6-2)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3,4,5 இற்கு ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்கள் தவறாது சமூமளிக்கு மாறும் ஆசிரியர்கள் வழிகாட்டியையும் கற்பிக்கும் வகுப்புக்களுக்கான ஆங்கில பாட நூலையும் கொண்டு வருமாறு வலய கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-4-29)



இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக் கிளையின் புதுவருட நிகழ்வில் முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் மங்களவிளக்கேற்றுவதையும் அருகில் வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மொழிப்பயிற்சி போதனாசிரியர்களிற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்காக அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் நாடளாவிய மும்மொழிப் பயிற்சி நெறி - 2010இற்கு யாழ். மாவட்டத்தில் மொழிப்பயிற்சி போதனாசிரியர்களாக (ஆங்கிலம் - சிங்களம்) கடமையாற்றுவதற்குத் தகுதியான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரத்தினையும் தகுதியை நிரூபிக்கும் சான்றிதழ் பிரதிகளினையும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் வகுப்புக்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் பிரதேசங்களிற்கு ஏற்பவுமே போதனாசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதுடன் கொடுப்பனவுகள் மொழிப் பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் என யாழ். பிராந்திய உள்ளூராடசி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (6-4)

## அரச ஊழியர்களுக்கான மொழிப் பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்காக அரச கரும மொழிகள் திணைக் களத்தினால் நடாத்தப்படும் நாடளாவிய மும்மொழிப் பயிற்சி நெறி - 2010 இற்கு விண்ணப்ங்கள் கோரப்பட்டுள்ளது.

குறித்த பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் தங்கள் திணைக்களத் தலைவரூடாக பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். ஒருவர் ஒரு பயிற்சி நெறிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதோடு விண்ணப்பப்படிவத்தினையும் மேலதிக தகவல்களையும் www.languagesdept. gov.lk எனும் இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்த குமார் தெரிவித்துள்ளார். (6-4)

## இராசி பலன்


*21-01-2010*
*(தை 8 வியாழக்கிழமை)*
*சஷ்டி முன்னிரவு 11.29 மணி வரை*
*உத்தரட்டாதி பிற்பகல் 6.02 மணிவரை*
*இராகு காலம் 2.05-3.35 மணி வரை*
*சுபநேரம் 8.05-9.35 மணி வரை*
*சஷ்டி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | மனச்சோர்வு, பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், சிந்தனை மிகுதி. |
| இடபம் | மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், போகனசுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | பிரபுத்தனம், தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய்குணமடைதல், நல்ல செய்தி. |
| கடகம் | உத்தியோக பங்கம், அதிக செலவு, பயந்த சுபாவம், பெரியோர் உதவி. |
| சிங்கம் | மனக்கவலை, உடல்நலக் குறைவு, பணக்குறைவு, முயற்சி தடை. |
| கன்னி | மனோதைரியம், நண்பர்கள் உதவி, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| துலாம் | தொழில் நன்மை, பகைவர் நேசம், காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, பிரயாணக் கஷ்டம், பணவிரயம், சகோதரர் உதவி. |
| தனுசு | மனச் சஞ்சலம், மாதா சுகம், சுப நிகழ்வு, சுபசெலவு. |
| மகரம் | மனோதைரியம், முயற்சி கைகூடும், விருந்துபசாரம், உறவினர் வருகை. |
| கும்பம் | போசனக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், அதிக செலவு, வீண் பகை. |
| மீனம் | தொழில் நன்மை, மாதர் நட்பு, சயன சுகம், தெய்வசிந்தை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 50 | 50 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 30 | 130 |
| தக்காளி | 100 | 20 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 50 |
| கோவா | 80 | 90 | 120 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 130 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 180 | 200 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 150 | 180 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 110 |
| பீற்றூட் | 80 | 100 | -- |
| கறிமிளகாய் | 200 | 40 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 30 |



வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலையில் இடம்பெற்ற வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வில் பாடசாலை அதிபர் தா.கண்ணதாசன் உரையாற்றுவதையும், நேசக்கரம் அமைப்பின் மூலம் வழங்கப்பட்ட கல்வி மற்றும் வாழ்வாதார உதவுதொகையை செல்வி நிசாந்தினிக்கு வழங்குவதையும், வல்வை அ.மி.த.க.பாடசாலை அதிபர் சக்திவேல் மாணவி ஒருவக்கு புத்தகப்பை வழங்குவதையும், இடம்பெயர்ந்து வந்து கல்வி கற்கும் மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பல்வேறு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலையில் வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்து கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு புலம்பெயர் வாழ் உறவுகளின் அமைப்பான நேசக்கரம் அமைப்பின் மூலம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் போரினால் தாயையும் தந்தையையும் இழந்து தற்போது தரம் 3 இல் கல்வி பயிலும் செல்வி நிக்லஸ் யோசப் நிசாந்தினிக்கு மாதாந்தம் ஆயிரத்து 750 ரூபாவிற்கு கல்வி மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுவதுடன் ஏனைய மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா பெறுமதியான கல்வி உதவிகளை வழங்க இவ் அமைப்பு முன்வந்துள்ளதுடன் இவ் அமைப்பின் இணைப்பாளர் திருமதி சாந்தி ரமேஸ் என்பவர் மூலம் இவ் உதவி கிடைத்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (6-4)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சி.தில்லைமணி பக்கவாத்தியங்கள் சகிதம் பண்ணிசை வழங்கவுள்ளார். (6-4-35)

✠✠

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "திருவருட் பயன்" என்னும் விடயம் பற்றி பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை முன்னாள் இரத்தப் பரிசோதகர் சண்முகதேவன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார் என்று மேற்படி ஆச்சிரமத்தினர் தெரிவித்துள்ளனர். (2-35)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் புதிய பாடத் திட்டத்தின் கீழ் தரம் 9 இற்கு செயன்முறை தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

## மாகாண மட்ட கணித புதிர் போட்டியில்
# வடமராட்சி வலயத்தில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

மாகாண க்ல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட கணிதப் புதிர்ப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெற்ற இப்போட்டியில் வடமராட்சி வலயத்தில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு;

*ஆங்கில மொழி மூலம்*

**தரம் -6**

மூன்றாமிடம் சு. திலக்ஷன் (ஹாட்லிக் கல்லூரி)

**தரம் - 7**

மூன்றாமிடம் ம.துஷிதா (நெல்லியடி மத்திய மகாவித்தி.)

**தரம் -8**

இரண்டாமிடம் லி.விதுர்ஷா (நெல்லியடி மத்திய மகா வித்தி, மூன்றாமிடம் க. மகிந்தன் (ஹாட்லிக் கல்லூரி)

**தரம் -09**

முதலாமிடம் த. கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), இரண்டாமிடம் பி. தர்சிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**தரம் - 10**

இரண்டாமிடம் க. கிருஷ்யாயினி (வட இந்து மகளிர் கல்லூரி)

**தரம் - 11**

முதலாமிடம் பா.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி)

**தமிழ் மொழி மூலம்**

**தரம் - 06**

இரண்டாமிடம் வி.சாளினி (கரணவாய் மகா. வித்தி), மூன்றாமிடம் ம. கவியரசன் (விக்னேஸ்வராக் கல்லூரி)

**தரம் - 08**

முதலாமிடம் க. மதனாகரன் (நெல்லியடி மத்திய மகா. வித்தி

**தரம் - 11**

இரண்டாமிடம் சி. கமலக்கண்ணன் (ஹாட்லிக் கல்லூரி) (6-4)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் இதுவரை 20 ஆயிரம் ரூபாய் பெறாத அனைவருக்குமான கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெறாத அனைவரும் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (2)




## இணைய நூலகம் அறிமுக நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலங்கை தமிழ் எழுத்தாவணங்களை இணையத்தில் வெளியிடும் தன்னார்வ கூட்டு முயற்சியாக இணைய நூலகம் பற்றிய அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நூலக திட்டத்தை பிரதேச ரீதியாக அறிமுகப்படுத்தும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து ஒத்துழைக்குமாறு சங்கச்செயலாளர் அறிவித்துள்ளார். (6-4-29)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி தனுவோடைப்பதி சிவகாமி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப வேளையில் புனரமைப்புச் செய்து பொலிவூட்டுவதற்காக சிவன், அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு யாகாரம்ப நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாகபூசை, ஹோமம், பூரணாகுதி என்பனவும் காலை 10 மணிக்கு பாலாலயத்தில் கும்பாபிஷேகம், காலை 10.30 மணிக்கு திருப்பணி நாள் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் பாலஸ்தாபன கும்பாபிஷேக சிவாச்சாரியாக சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்களும் சாதகாசிரியராக பிரம்மஸ்ரீ சபா உமாபதி சர்மாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4-30)

# யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களைப் பேணும் வடமாகாண தொல்பொருள் கலைத் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சின் கீழ் இயங்கும் வடமாகாண தொல்பொருட் கலைத்திணைக்களம் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம்மிக்க முக்கியமான இடங்களையும் பொருட்களையும் பேணிப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்து வருவதாக தொல்பொருட் கலை திணைக்கள ஆராய்ச்சி அலுவலர் பி.ஜே.ஆர். விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த வருட பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள இவ் அலுவலகத்தினால் நெடுந்தீவு , யாழ்ப்பாணம், சங்கானை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கோட்டைகளும் சங்கிலியன் தோப்பு ஊர்காவற்றுறை கடல் கோட்டை, கந்தரோடை விகாரை,யமுனா ஏரி என்பனவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் அகழ்வாராய்ச்சி செய்யும் இடங்களாக சாட்டி, கந்தரோடை, கோட்டை, அல்லைப்பிட்டி என்பன உள்ளடங்குகின்றன.

இதைவிட சகல விதமான தெய்வப்படிமங்கள், பழைய காலத்து அரசர்கள் பயன்படுத்தி உலோகப் பொருட்கள் , உருவங்கள் , பல்லக்குகள், மிருக உடல்கள் போன்ற பெறுமதிமிக்க ஏராளமான பாரம்பரியப் பொருட்களினை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தின் அருகே அமைந்துள்ள காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனை பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமின்றி ஏனையோரும் பார்வையிட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் வசிக்கும் மக்கள் தங்கள் பகுதியில் பழைய காலத்து தொல் பொருட்கள் ஏதாவது காணப்பட்டால் 021 222 4574 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது 76/1 கண்டிவீதி , யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாக கொண்டு வந்தும் கையளிக்கமுடியுமெனவும் தொல்பொருட்களை யாராவது சேதப்படுத்தவோ புதிதாக்கவோ எதனையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் அவ்வாறு செய்ய முற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தொல்பொருட் கலைத் திணைக்கள ஆராய்ச்சி அலுவலர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொல்பொருட்களை பேணிப் பாதுகாத்து இனிவரும் சமுதாயத்திற்கு பெற்றுக் கொடுப்பதனை நோக்கமாகக் கொண்டு செயற்படும் இத்திணைக்களமானது நாடுமுழுவதும் 9 பிரதேச அலுவலகங்களையும் யாழ்ப்பாண அலுவலகத்தில் 30 பணியாளர்களையும் கொண்டு விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-30)

## ஜனாதிபதி தேர்தலில்
# நடுநிலைமையை கடைப்பிடிக்க விரும்புகின்றேன்- சந்திரிகா

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இரு பிரதம வேட்பாளர்களில் யாரையும் தான் ஆதரிக்கவில்லை என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் அமைப்பு கல்கிசையில் உள்ள ஆடம்பர விடுதியில் ஒழுங்கு செய்த கருத்தரங்கு ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் கலந்து கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் சந்திரிக்கா தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவை ஆதரிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேலும் எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தான் நடுநிலைமையை கடைப்பிடிக்க விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# அர்ப்பணிப்புடன் பக்கச் சார்பின்றி அரச ஊழியர் செயற்படவேண்டும்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்கள் பக்கச் சார்பின்றி செயற்பட வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கமைய அரசாங்க ஊழியர்கள், காவல்துறை மற்றும் முப்படையினர் அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டு செயற்படக் கூடாது என்றும் அரச ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி நன்கு உணர்ந்துள்ள போதிலும் ஒரு சில நபர்களின் பக்கச் சார்பான நடவடிக்கையினால் அனைவரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் ஆளும் கட்சியினர் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

17ஆவது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்படாத காரணத்தினால் நியாயமான தேர்தல்களை எதிர்பார்க்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.


திருத்தச் சட்ட மூலங்களை அமுல்படுத்தி அதன் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முனைப்பு காட்டவில்லை என்றும் இலங்கை காவல்துறை சேவை தொடர்பில் திருப்தி அடைய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல்வாதிகளின் தாளத்திற்கு ஏற்ற வகையில் ஆடும் நபர்களுக்கு மட்டும் பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகள் கிடைக்கப் பெறுவதாகவும் அமைச்சு செயலாளர்கள், இராஜதந்திரிகள் என பல்வேறு துறைகளும் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை நடாத்த அனைத்து அரசாங்க ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2-6)

# அடக்கு முறை மூலம் வெற்றியை அடைய நினைக்கும் ஆளும் தரப்பு

## கருஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

ஆளும் கட்சி வன்முறைகளின் மூலம் தேர்தலில் வெற்றியீட்ட முயற்சி மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகளின் மூலம்தேர்தலை வெற்றிகொள்ள ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீவிரம் காட்டி வருவதாக அவர் அறிக் கையின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் ஓர் கட்டமாகவே வாரியப்பொல பிரதேசத்தில் தமது கட்சி ஆதரவாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது இலங்கையில் மாற்று அரசியல்கொள்கையுடையவர்கள்உயிரைத்தியாகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# புலிகளின் சர்வதேச வலையமைப்பு இன்னமும் இயங்கி வருகின்றது

## வெளிநாட்டு இலங்கையர் பேரவை அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பு இன்னமும் இயங்கி வருவதாக வெளிநாட்டு இலங்கையர் பேரவை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

எந்தவொரு வழியிலாவது இலங்கையைப் பிளவடையச் செய்து தனிநாட்டுக் கோரிக்கையை வென்றெடுக்க சில சக்திகள் தீவிர முனைப்பு காட்டி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் மொத்த தமிழர் சனத்தொகையில் 60 வீதமானவர்கள் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் அதில் பெரும்பான்மையானவர்கள் புலிகளுக்கு ஆதரவளித்து வருவதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சட்ட விரோத ஆட்கடத்தும் முயற்சிகளின் மூலம் பலர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகவும் நிதி திரட்டுதல் பிரசாரங்களில் ஈடுபடுதல் என பல்வேறு வழிகளில் குறித்த நபர்கள் புலிகளுக்கு ஆதரவளித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

# குடும்ப ஆதிக்கம் செய்வோர்க்கு தண்டனையாக வரும் தேர்தலில் மக்களின் தீர்ப்பு அமையும்

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

குடும்ப ஆதிக்கத்துக்கு பிரியாவிடையளிக்க இந்நாட்டு மக்கள் தயாராகி விட்டனர் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் செங்கடகல ஐ.தே.க அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்கள் யார்? என்பதை இன்று நம் நாட்டு மக்கள்நன்றாக அறிந்துள்ளனர்.

இம் மாதம் 26ஆம் திகதி அவர்களுக்கான தண்டனையை தேர்தல் தீர்ப்பாக மக்கள் வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டிப் பிரதேசத்தில் நடைபெற்ற பொது ஜனாதிபதி வேட்பாளர் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவான பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறுகையில்,

தேர்தல் சட்டங்கள் முற்றாக மீறப்படுகின்றன. தேர்தல் ஆணையாளர் துச்சமாக மதிக்கப்படுகிறார்.

தோல்வி நிச்சயம் என்பது உறுதியாகி விட்ட நிலையில் மஹிந்த சிந்தனை நம்பிக்கையான மாற்றச் சிந்தனையால் குடைக் தெறியப்படும்.

ஊழல் மோசடி, இலஞ்சம், திருட்டு,மனித உரிமை மீறல், கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபட்ட ஆளும் வர்க்கத்தினர் ஜெனரலின் வெற்றி எவராலும் தடுக்கமுடியாது என்பதையறிந்து அஞ்சி நடுங்குகின்றனர்.

பொதுமக்கள் தங்களது நல்ல தீர்ப்பு மூலம் நாட்டில் நல்லாட்சி மலர்வதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டுள்ளனர். அதிகார துஷ்பிரயோகத்தால் மக்களை வெற்றி கொள்ள இயலாது.

சாதி, மத, இன, மொழி, பிரதேச பேதமின்றி புதியதோர் இலங்கையையும் புதியதோர் அரசியல் கலாசாரத்தையும் தோற்றுவிக்கும் இலட்சியம் வெற்றிபெற, பொன் சேகா வெற்றி பெற வேண்டும்.

பொன்சேகாவின் வெற்றி , ஜனநாயகத்தின் வெற்றி ,பொதுமக்கள் வெற்றி, இன, மத , மொழி, பிரதேச ஐக்கியத்தினதும் சமத்துவத்திற்கானதும் வெற்றி, பொருளாதார , தேசிய சுபீட்ச வளத்திற்கான வெற்றி, பொருட்களின் விலையால் பெருமூச்சு விடும் மக்களின் வெற்றி.

மேலும் விவசாய அபிவிருத்தி தொடர்பாக மேடைகளில் மார்தட்டிக் கொள்பவர்கள்



அரிசி ,வெங்காயம், கிழங்கு உட்பட எல்லாவற்றையும் பெருந்தொகையாக இறக்குமதி செய்யும் அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால் பசியாலும் பட்டினியாலும் வாடும் மக்களின் துன்பம் தீர, தோட்ட மக்களின் வறுமை நீங்க , ஊதியம் அதிகரிக்க ஜெனரல் பொன் சேகாவை ஆதரியுங்கள்.

அன்னப்பட்சி நிம்மதியான மாற்றத்தின் சின்னம் என்றார். (2-6)

# தமிழகத்தில் போதைப்பொருட்களுடன் 3 இலங்கையர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு இந்தியாவிலிருந்து போதைப் பொருட்களை கடத்த முற்பட்ட மூன்று இலங்கையர்களை தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர். தமிழகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று இலங்கையர்களிடமிருந்தும் 660 கிராம் எடையுடைய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்களை மேலதிக விசாரணைகளுக்காக கீயூபிரிவு பொலிஸாரிடம் தமிழகப் பொலிஸார் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (2)











லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினரால் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு இலவச ஆங்கிலம் மற்றும் கணனிப் பயிற்சி நெறி அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த கலாநிதி அ.தேவசகாயம் மங்கல விளக்கேற்றி உரை நிகழ்த்துவதையும், பயிற்சி நெறியில் இணைந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இதுவரை வாக்காளர் அட்டை கிடைக்காதோருக்கு

(கொழும்பு)

இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி பிரதான அஞ்சலகங்களில் தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தேர்தல் செயலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமாகியதுடன் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. விநியோகப் பணிகள் முடிவடைந்ததை அடுத்து மீதமுள்ள வாக்காளர் அட்டைகள் அஞ்சல் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் எதிர்வரும் 26ஆம் திகதி மதியம் வரை அவற்றை அஞ்சலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

(2-6)

# புதிய போக்குவரத்து ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய சந்தையின் கிழக்குப் பக்கமாக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்வண்டிகளுக்கான தரிப்பு நிலையத்திற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் இப்பகுதிக்குள் தனியார் வாகனங்கள் செல்வதற்கு அனு மதிக்கப்படமாட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மினிவான்களுக்கான தரிப்பிடத்திற்கு புதிய சந்தையின் தெற்குப்பக்கமாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆட்டோக்களுக்கான தரிப்பு நிலையத்திற்கான இடம் புதிய சந்தையின் மேற்குப்பக்கமாக ஒதுக்கப்பட் டுள்ளது. எனினும் மகாத்மாகாந்தியின் சிலைக்கு அருகாமையில் இரு ஆட்டோக்கள் நிற்பதற்கு அனுமதிக்கப்படும். அவை சேவைக்குப் புறப்பட்டதும் அடுத்த ஆட்டோக்கள் இரண்டு அங்கு செல்ல அனுமதிக்கப்படும் என்றும் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதிய சந்தையின் தெற்கு, மேற்கு, வடக்கு பக்க வீதிகள் அகலமாக்கப்பட்டு புனர மைக்கப்பட்டு இரு பிரிவாக்கப்பட்டு ஒருவழிப் பாதையாக்கப்பட்டுள்ளது.

நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் சந்தையின் தெற்குப் பக்கமாகச் சென்று மேற்குப்பக்கத்தை அடைந்து பின்னர் வடக்குப்பக்கமாகவும் முதலாம் குறுக்குத்தெருவூடாக இரண்டாம் குறுக்குத்தெருவுக்குச் சென்று நகரில் இருந்து வெளியேற முடியும் என்றும் நகருக்குள் சென்ற வாகனங்கள் மீண்டும் அப்பகுதிகளின் உட்பக்கத்திற்குச் செல்ல வேண்டுமாயின். பஸ் நிலையத்தின் வடமேற்குப்பக்கமாக ஒதுக்க ப்பட்டுள்ள வீதித்திருப்பு முனையில் திரும்பி நகருக்குள் செல்ல முடியும்.

அத்துடன் நகரப்பகுதியில் போக்கு வரத்திற்கு இடையூறாக விற்பனைப்பொருட் களை காட்சிக்கு வைப்பதும் முற்றாக தடை செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(2)

# த.தே.கூட்டமைப்பு சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அடிமையாகி விட்டது

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சர்வதேச அழுத்தங்களுக்கும் நிதிக்கும் அடிமையாகி விட்டதனால் தான் இன்று அந்த அமைப்பு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது என முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. வின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இன்று சிதறிப்போய்விட்டது. இப்போது சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. புலி ஆதரவு சர்வதேச அமைப்புக்கள் சரத்பொன்சேகா மூலம் தமது கலைந்து போன கனவுகளை நனவாக்கும் முயற்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பயன்படுத்துகின்றன.

சுய ஆட்சி தொடர்பான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கவில்லை. புலிகளின் தோல்வியோடு அதனை தமிழ் மக்கள் மறந்துபோயிருந்தனர். எனினும் சரத்பொன்சேகாவின் அரசியல் பிரவேசத்தால் மீண்டும் ஒரு அச்சமான சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் எழுவர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளனர். நால்வர் தேர்தலை விட்டும் ஒதுங்கியிருக்கத் தீர்மானித்துள்ளனர். சர்வதேச அழுத்தம் காரணமாகவே எண்மர் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர் என்றும் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(2-6)

# ஜனாதிபதித் தேர்தலில்

## போட்டியிலிருந்து விலகுவோரின் கட்டுப்பணத்தை அரசுடமையாக்கத்திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் வேட்புமனுக்களை தாக்கல் செய்து போட்டியில் இருந்து விலகிக் கொள்வோரின் கட்டுப்பணத்தை அரசுடமையாக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தவிர அந்த வேட்பாளர்களுக்கு வழங்கப்படும் தொலைக்காட்சி மற்றும் வானொலி பிரசாரக் காலத்தை இரத்துச் செய்யவும் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளதாக தேர்தல் செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து ஜனசேத்த முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்லே சீலாரத்ன தேரர் போட்டியில் இருந்து விலகியுள்ளதுடன் மயோன் முஸ்தபா பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலகிக் கொண்டுள்ளார்.

இந்த வேட்பாளர்களுக்கு மேற்கூறிய சிறப்புரிமைகள் வழங்கப்படமாட்டாது எனவும் ஏனைய வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகினால் அவர்களுக்கும் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் திணைக்கள அதிகாரி மேலும் கூறியுள்ளதாக தெரிகிறது.

(2-6)









கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகத்தின் கல்வி மேம்பாட்டுவிழாவில் கழகத்தலைவர் லயன் ப.செல்லத்துரை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் எஸ்.யமுனானந்தா ஆகியோர் உரையாற்றுவதையும் ஆசிரியை திருமதி த.சற்குணேஸ்வரி மாணவி ஒருவருக்கு கல்வ மேம்பாட்டு நிதியை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

A9 பாதை திறந்து
சுமுகமான போக்குவரத்து




வன்னிப்பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம்



இடம்பெயர்ந்த மக்கள்
முகாம்களிலிருந்து விடுவிப்பு



வலி வடக்கு, யாழ் கிழக்கு உயர் பாதுகாப்பு வலயங்களில்
மீள்குடியேற்றம் ஆரம்பம்



முன்னாள் போராளிகள்
பெற்றோரிடம் கையளிப்பு





**நடக்காது என்று எண்ணியிருந்தவையெல்லாம்**
**வேகமாக நடந்தேறிக்கொண்டிருக்கின்றன...**

**இன்னும் நடந்தேறவேண்டிய மிகுதிக் காரியங்களையும்**
**இதே வழியில் வெற்றிகரமாக நடத்தி முடிக்க**

# மகிந்த ராஜபக்ஷவின்
# வெற்றியில் பங்கெடுங்கள்

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**


எழில்நயம்
யாழ்ப்பாணத்தின் எழிலுக்கு மெருகூட்ட
வண்ண வண்ணக் கோலங்களில்
உலகப் புகழ்பெற்ற வடிவங்கள்.
புதிய லங்கா வோல்டைல் மற்றும் லங்கா டைல்ஸ்
யாழ்ப்பாண காட்சியறை இப்போது திறந்துள்ளது.
Elegance
Adding colour to the vibrant landscape
of Jaffna with world renowned designs.
The new Lanka Walltile and
Lanka Tiles showroom is now open.
LWL
Lanka Walltile PLC
Lanka Tiles PLC
85, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# உலகம்



மிதக்கலாம் ;
விளையாடலாம் ! மெரினாபே உலகின் மிகப்பெரியமிதக்கும் விளையாட்டு அரங்கம். இது சிங்கப்பூரில் உள்ளது. கடற்கரையின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அரங்கம் முழுவதும் ஸ்டீலாலானது. 120 மீற்றர் நீளம், 83 மீற்றர் அகலம் கொண்ட இது 9000 நபர்கள், 200 தொன் அரங்கப் பொருட்கள், 330 தொன் எடை கொண்ட இராணுவ வண்டிகளை தாங்கும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய அணிவகுப்பு நிகழ்ச்சி, தடகளப் போட்டிகள், கால்பந்து போட்டிகள், இசைக் கச்சேரிகள், கண்காட்சிகள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் இங்கு களைகட்டுகின்றன. கடல் அழகை ரசித்தபடி நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பது புதிய அனுபவம் என்கின்றனர் கொடுத்து வைத்த சிங்கப்பூர்வாசிகள்!

# அனிமல் கார்னர்



தென்னமெரிக்காவில் வாழும் இதன் பெயர் அசையாக்கரடி. நெடுநேரம் ஒரே இடத்தில் அசையாமல் இருக்கும் என்பதால் இந்தப் பெயர். இரவிலேயே இது இரை தேடும். பூச்சி, பல்லி, தாவரங்களை மட்டுமே உண்ணும்.

உலகில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் வகை தேனீக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை அன்டார்டிகா தவிர்த்து மற்ற எல்லாக் கண்டங்களிலும் உள்ளன.

தென்கிழக்கு ஆபிரிக்காவில் லெமூர் என்ற ஒருவகை குரங்கு உள்ளது. இதன் முகம் நாய் போலவே இருக்கும். கொரில்லா, சிம்பன்சி, போனபோ, உராங்குட்டன் வகைகளில் இருந்து வேறுபட்டது இது.


தட்டாம்பூச்சிகள் (தும்பிகள்) எல்லாமே ஒரே இனத்தைச் சேர்ந்தது என்றே பலரும் நினைக்கின்றனர். உண்மை அதுவல்ல. படத்தில் நீங்கள் பார்ப்பது ஒடோனேட்டா வகையைச் சேர்ந்தது. இதன் உடல் மெல்லிய கம்பி போல நீண்டு இருக்கும்.

# செயற்கை நாய்


பல்சுவை உலகம்

நாய் வீட்டின் செல்லப்பிராணி. ஆனால் வீட்டில் சுட்டிகள் நாய் வளர்க்க விரும்பினால், பெரியவர்கள் பயத்தின் காரணமாக நிராகரித்து விடுவார்கள். இனி இப்படி பயப்படவே வேண்டாம்.

ஜப்பானில் டோக்கியோ நகரில் நடைபெற்ற சர்வதேச ரோபோ கண்காட்சியில் கெனிபூ எனற் ரோபோ நாயை அறிமுகம் செய்துள்ளனர். குட்டி நாய் போலவே உள்ளது. இது, குரைக்கும், எஜமானரைக் கண்டு கொள்ளும், அருகில் வந்து ஒட்டிக் கொள்ளும். ஜப்பானில் சிறுவர்களை கெனிபூ கவர்ந்து விட்டது!



# தங்கமான மீன்!



புதிது புதிதாக எலக்ரோனிக் பொருட்களை கண்டு பிடித்த ஜப்பானியர்கள், இப்போது ஒரு படி மேலே போய் கண்ணாடி தங்க மீன் ஒன்றை உருவாக்கி உள்ளனர். அந்நாட்டு மெய் பல்கலைக்கழகத்தின் உயிரியில் ஆசிரியர் யுடாகா தமாரு. தன் மாணவ குழுவுடன் இணைந்து இதை உருவாக்கியுள்ளார். உயிரியல் பாடத்தில் தவளை உட்பட உயிரினங்களை அறுத்து, அதன் உடல் பாகங்களின் செயல்திறனை படிப்பார்கள். இந்த மீனின் இதயம் துடிப்பதையும், உணவுக் குழாயில் செல்வதையும் துல்லியமாகப் பார்க்க முடியும். இனிமேல் எந்த உயிரினத்தையும் கூறு போட்டு படிக்கத் தேவை இல்லை!




சுதந்திர தேசத்தில்
சமத்துவமாய் வாழ..
ஜனநாயகம் நிலைக்க..
எதிர்காலம் செழிக்க..

யாழ்மக்கள் பட்டதுன்பம் பறக்கலாச்சு
தொட்டதெல்லாம் துலங்கும் காலம் தொடங்கலாச்சு!

வன்னிமக்கள் வாழ்வினிலே இருந்த இன்னல்
வளம்மிக்க செயற்பாட்டால் மறையலாச்சு!


எழுகதிரோன் திசையென்னும் கிழக்கு மண்ணில்
ஏற்றமிகு வாழ்வை மக்கள் ஏற்கலாச்சு!

மலையகத்துப் பசுமைமிகு மண்மீதெங்கும்
மலர்ந்துள்ள புது வாழ்வு தொடரலாச்சு!

தமிழ் பேசும் மக்கள் கூடத் தலைநகரில்
தலை நிமிர்ந்து வாழுந் தன்மை தன்னைப் பெற்றார்!

எங்கள் தெரிவு
மஹிந்த ராஜபக்ஷ

தமிழர்தம் வாழ்வில்
விசட்டும் வசந்தம்




உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் கவிமணி க.ஆனந்தராசா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலய சித்திரபாட முதன்மை ஆசிரியர் து.துஷ்யந்தன், அதிபர் மு.விக்னேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் மற்றும் பெற்றோர் சார்பில் த.தனேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# கடந்த வருடத்தில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள வருமானம் ரூ.150 மி.அதிகரிப்பு

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் கடந்த வருடம் அதன் செயற்பாடுகளை புதிய முறையில் மாற்றி அமைத்த பின்னர் வருமானம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

இப்புதிய நடைமுறையின் மூலமாக வாடிக்கையாளர்கள் துரிதமாக தங்கள் சேவையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் வருமானம் கடந்த ஆண்டில் ரூபா 150. 9 மில்லியனால் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் சொகுசு வாகன வரியூடாக ரூபா 211.6மில்லியனும் வாகனப்பதிவு, மாற்றுதல் வரிமூலமாக ரூபா 28.4 மில்லியனும் பிற வரிகள் மூலமாக ரூபா. 1974 மில்லியனும் மொத்தமாக ரூபா 2214மில்லியன் பெறப்பட்டது என மோட்டார் போக்குவரத்து திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள், பதாதைகளை நீக்கும் பணிகள் ஆரம்பம்

## பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சுவ ரொட்டிகள், பதாதைகள் மற்றும் கட்டவுட்களை நீக்கும் பணிகள் தற்போது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

இதேவேளை வீதிகளில் நடத்தப்படும் பேரணிகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இது வரை பதிவாகிய முறைப்பாடுகளில் 123 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டுள்ளன. இதேவேளை இந்தத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை ஒட்டி இதுவரை 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தொடர்பான சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (6)

# வாக்களர்களின் அடையாள அட்டைகளை பறிமுதல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டம்

## அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தகவல்

(கொழும்பு)

எதிர்கட்சிகள் எதிர்வரும் 25ஆம் திகதி நள்ளிரவில் வாக்காளர்களின் அடையாள அட்டைகளை பலாத்காரமாகப் பறித்தெடுப்பதற்கு திட்டங்களைத் தீட்டி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதென கல்வி அமைச்சரும் ஐ.ம.சு முன்னணியின் பொதுச் செயலாளருமான சுசில் பிறேமஜெயந்த தெரிவித்தார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துதெரிவிக்கையில்,

இம் முறை தேர்தலின்போது தேசிய அடையாள அட்டைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எமது கட்சி ஆதரவாளர்கள் வாக்களிப்பதை தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் அடையாள அட்டைகளை கிராம மட்டத்தில் பலாத்காரமாக பறிமுதல் செய்ய திட்டமிட்டுள்ளதாக எமது கட்சி ஆதரவாளர்கள் கடிதங்கள், பக்ஸ், தொலைபேசிகள் மூலம் தகவல்களை தெரிவித்த வண்ணம் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6)

# கொழும்பு பல்கலை பட்டதாரிகள் மன்றம் ஜனாதிபதியை ஆதரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதென கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டதாரிகள் மன்றம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவமே நாட்டில் தலைவிரித்தாடிய பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை ஏற்படுத்தியது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதையடுத்து மக்கள் அச்சமின்றி வாழ முடிகிறது. எனவே ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக பட்டதாரிகள் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யுத்தம் நடைபெற்ற நிலையிலும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அபிவிருத்தியை மறந்துவிடவில்லை பல நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. கிராமப்புறங்களில் பாதைகள் சீரமைக்கப்பட்டன.

நாடளாவிய ரீதியில் ஐந்து பாரிய துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் மிகப் பெரிய துறைமுகம் அம்பாந்தோட்டையில அமைக்கப்படுகிறது. இவை மட்டுமன்றி மேல் கொத்மலை, நுரைச் சோலை ஆகிய மின்சார திட்டங்களும் அபிவிருத்தியின் உதாரணங்களாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க தீர்மானித்ததாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (6)

# 40 வகை மருந்துகள் இந்த வாரம் இறக்குமதி

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாகவுள்ள 40 வகை மருந்துகளை இவ்வாரத்தினுள் இறக்குமதி செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இதற்காக விசேட குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று தேவையான மருந்துகளைக் கொள்வனவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இவற்றுள் அறுவைச் சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் 16 ஊசி மருந்துகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விமானம் மூலம் இந்த மருந்து வகைகள் இங்கு கொண்டு வரப்பட்டதும் அவற்றை உடனடியாக வைத்தியசாலைகளுக்கு விநியோக நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (2-6)

# ஜனாதிபதி தேர்தல் பணிகளுக்காக அதிக பஸ்களை பயன்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல் கடமைகளுக்காக அதிக பஸ் வண்டிகளை ஈடுபடுத்தத் தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகச் செயலகம் கூறுகிறது.

இதற்கமைய இம்முறை ஜனாதிபதித் தேர்தல் கடமைகளின் போது 3 ஆயிரத்து 500 வண்டிகள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இது தொடர்பான ஆலோசனை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தேர் தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தேவையான எரிபொருளைக் களஞ்சியப்படுத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிகிறது.

மேலும் தேர்தல் கடமைகளுக்குத் தேவையான ஏனைய வாகனங்களை அரச திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)




# விஜயநகர காலத்து ஓவியங்கள்

பேராசிரியர் சி.பத்மநாதன்

அடுத்துள்ள காட்சியிலே மூன்று லோகங்களினதும் காவலரான ஈஸ்வரன் போர் வீரனாகி ஆலீடகோலத்திற் தோன்றும் நிலை ஓவியமாக வரையப்பெற்றுள்ளது. பூமியைத் தேராகவும் சந்திர சூரியரை அதன் சக்கரங்களகாவுங் கொண்டு முப்புரங்களை எரிப்பதற்குச் செல்லுங் காட்சி இங்கே வரையப் பெற்றுள்ளது.

நான்கு வேதங்களும் தேர்க் குதிரைகளாக உருவாகியுள்ளன. பிரம்மதேவன் சாரதியாக வந்துள்ளான். மேருவை வில்லா



கவும் வாசுகியை நாணாகவும் கொண்டு திரிபுரங்கள் மீது அஸ்திரங்கள் செலுத்தப்படுகின்றன.

திரிபுரங்களிலுள்ள அசுரர்களை அழிப்பதற்கென்று திருமால் அஸ்திரங்களாக வடிவு கொண்டுள்ளான். திரிபுர தகனத்தைக் கண்ட சிவகணங்களும் அடியார் கூட்டமும் ஆர்ப்பரித்து ஆடுகின்றனர். இந்த ஓவியத்திலே சிவனுடைய உருவம் திரிபங்கமாகவும் பார்வதியினுடைய வடிவம் சமபங்கமாகவும் அமைந்துள்ளன.

இறைவரின் வேணியில் அமைந்த கங்கையின் பாவத்தினாற் பார்வதிக்குக் கோபம் உண்டாகின்றது. கண்டிதா நாயகிக்கும் சடநாயகனுக்கும் இடையிலான தகராறு இங்கே சிறப்பாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளது. அம்சும பேதாகமம், சில்பரத்தினம் ஆகியவற்றிலும் இந்த அம்சத்தை எவ்வாறு பிரதிமாலக்ஷணங்களிலே விளக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. பார்வதியினுடைய **விரகிதானம்** இந்த ஓவியத்திலே மிகச் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தின் அருகிலே சிவனுடைய புஜங்கத் திராஸித நடனக்கோலம் அமைந்திருக்கின்றது.

அதற்குப் பக்கத்தில் விருஷப ஆரூடராகி, பார்வதியுடன் இடபத்தின் மேல் அமர்ந்திருக்குங் கோலந் தெரிகின்றது. பக்கத்திலே அந்த



கனின் தலைமேல் காலொன்றினை ஊன்றிய கோலத்தில் நந்தியின் வ்டிவங் காணப்படுகின்றது. மேலும், சந்திரசேகர மூர்த்தத்திற் சிவனுடைய கோலம் வரையப் பெற்றுள்ளது.அருகிலே பார்வதியின் ஆசனக் கோலம் சித்திரிக்கப்பட்டுள்ளது. வலக்கரத்திலே மலர் மொட்டு அமைந்திருக்கின்றது. கிரீட மகுடம், குசபந்தம் முதலியன தேவியின் ஆபரணங்களாயுள்ளன.

வீரபத்திரர் கோயிலின் மூலஸ்தானத்துச் சுவர்களிலே வரையப்பெற்றுள்ள ஓவியங்களிற் சில மூர்த்தங்கள் பல காணப்படுகின்றன. அங்குள்ள அடியவர் கூட்டத்திற் குரங்கு முகங்கொண்ட ஒருவரின் உருவம் காணப்படுகின்றது. அதனை முசுகுந்தச் சக்கரவர்த்தியின் வடிவம் என்று கொள்ளலாம். திருவாரூரில் முசுகுந்தனின் உருவம் பல காட்சிகளிலே அமைந்திருக்கின்றது.

சிவனுடைய தலைசிறந்த அடியார்களுள் முசுகுந்தனும் ஒருவன் என்பது ஐதீகமாகும். தியாகராஜருடைய படிமங்களைச் சிவலோகத்தினின்றுங் கொண்டு வந்து அவற்றை முசுகுந்தன் திருவாரூரிலே தாபனஞ் செய்து ஆலயங் கட்டினான் என்பது புராணக்கதை. அது திருவாரூர்ப் புராணத்தில் விரித்துரைக்கப்படுகின்றது.

சோமபாளயத்தில் உள்ள விஷ்ணு கோயில் லெபாக்ஷி ஆலயத்தைக் காட்டிலுஞ் சற்றுக் காலத்தாற் பிற்பட்டதாகும். அது பெரிதுஞ் சிதைவுற்ற நிலையில காணப்படுகின்றது. அதன் நுழைவாயிலை அடுத்துள்ள மண்டபத்திலே இராமாயணக் காட்சிகளின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவை குறிப்பிடத்தக்க வனப்புடன் காணப்படுகின்றன.

அவை ஓரளவிற்கு லெபாக்ஷி கோயிலின் அர்த்தமண்டபத்திலுள்ள ஓவியங்களை ஒத்திருக்கின்றன. இராமன் தாடகையைக் கொல்லுங் காட்சி, மந்தரையின் சொல்லைக் கேட்டு மனம் குழம்பிய கைகேயியினைத் திருப்திப்படுத்த தசரதன் மேற்கொள்ளும் முயற்சி, அரசகுமாரர், வாத்தியக்காரர், மேளகாரர், விறலியர், பாணர் போன்றோரின் தோற்றங்கள் முதலியன மிகுந்த திறமையோடு வரையப்பெற்றுள்ளன.

பதினாறாம் நூற்றாண்டின் கடைக்காற் கூற்றைச் சேர்ந்த ஓவியங்கள் ஆனைகொந்தியிலுள்ள உச்சயப்ப மடத்திலே காணப்படுகின்றன. அவற்றின் பொருள் மரபு சமகால வழமைகளைப் பிரதிபலிப்பதாகும். அத்துடன் அவை ஓவியக் கலைஞர்களின் அனுபவ முதிர்ச்சியினையும் விளக்கும் வண்ணமாக உருவாக்கப்பட்டுள்ளன. உயிரினங்களை அவதானமாகவும் சீவகா ருண்யத்துடனும் கலைஞர்கள் நோக்கினார் கள் என்பதற்கு அணில்களின் சித்திரங்கள் சிறந்த எடுத்துக் காட்டாகும். சில ஓவியங் களிலே பல்லக்குகளைப் பெண்கள் தூக்கிக் கொண்டு ஓடுங் காட்சி வரையப் பெற்றுள்ளது.

நாயக்கர் காலத்துத் தென்னிந்திய ஓவியங்களில் அரசிளங்குமாரர்களைப் பெண்கள் தூக்கிச் செல்லும் காட்சியைச் சித்திரங்களிலே வரைந்து கொள்வது ஒரு பொதுவான வழக்கமாகும். நவநாரி, குஞ்சரம் என்னும் வடிவம் அக்காலத்து ஓவியங்களிலே சிறப்பிடம் பெறுகின்றது.

மன்மதன் – ரதி போன்றோரைப் பெண் வடிவமான யானைகளும் குதிரைகளுந் தாங்கிச் செல்லும் காட்சி இவ்வாறு வர்ணிக்கப்படும்.விஜயநகரப் பேரரசின் எல்லாப் பாகங்களிலும் கலை வடிவங்களிலே நவநாரி, குஞ்சரங்கள் இடம்பெறலாயின. மூத்வித்திரி என்னுமிடத்தில் தூண்களிலும் மரத்தாலான சிற்பங்களிலும் அத்தகைய வடிவங்கள் காணப்படுகின்றன. காஞ்சிபுரத்துக் கோயில்களிலும் அவற்றைப் பரவலாகக் காணலாம்.

### 3.காஞ்சிபுரத்து வரதராஜப்பெருமாள் கோயில் ஓவியங்கள்

ஆண்டாள் ஊஞ்சல் மண்டபம் என்பதன் முகட்டு விதானத்திலே ஓவியங்கள் காணப்படுகின்றன. அங்கே கோபிகா வஸ்திரஹரணம், காலீயமர்த்தனம் போன்ற கிருஷ்ணரது பால்ய பருவநிலைகள் காட்சிகளாக வரையப் பெற்றுள்ளன. திருமால்,பூதேவி, ஸ்ரீதேவி என்னுந் தேவியரோடு வீற்றிருத்தல், நாட்



டியக் கரணங்கள், விஜயநகர ராயர்களின் இலச்சினைகளான வராகம், ஈட்டி என்பவற்றின் உருவங்கள்,பல்லக்கிலே வைத்துக் கொண்டு செல்லப்படும் வித்யாதரரின் வடிவங்கள்,மன்மதன் -ரதி என்போரின் வாகனங்களாகிய யானைகள்,குதிரைகள் போன்றவற்றின் உருவங்கள் முதலியன வனப்புடைய கோலத்தில் வரையப்பெற்றுள்ளன. மூலைகளில் தேவர்களதும் கருடர்களதும் உருவங்கள் காணப்படுகின்றன.

நரசிம்மர் கூடத்திற்கு எதிரிலுள்ள மண்டபத்திலும் முகட்டு விதானத்தின் மையப் பகுதியினைச் சுற்றியுள்ள வரிசையிலே மன்மதன் -ரதி ஆகியோரின் உருவங்கள் வெவ்வேறு கோலங்களிலே வரையப்பெற்றுள்ளன.

ஓவியம் வரையப்பெற்ற களத்தின் மூலைகளிலே கிளி வாகனத்தில் அமர்ந்த ரதியின் உருவங்கள் அமைந்துள்ளன. சில இடங்களிலே மலரம்புகளை ஏவுவதற்குக் கரும்பு வில்லை வளைத்த கோலத்திற் காமனின் வடிவந் தெரிகின்றது. வேறு சில இடங்களிலே மன்மதன் தனது நாயகியினைக் காம உணர்ச்சியோடு பிடித்து நிற்குங் காட்சி தெரிகின்றது.

இன்னுஞ் சில இடங்களில் ரதியைக் கைப் பிடித்துக்கொண்டு அவளின் தோழியர் சகிதமாக காமன் கூத்தாடுங் காட்சி வரையப் பெற்றுள்ளது. சிவப்பு, மஞ்சள், பச்சை, கரிநிறம் ஆகிய வண்ணப் பூச்சுக்களின் சுவடுகள் இப்பொழுதுந் தெரிகின்றன. மற்றைய வண்ணங்கள் பெரும்பாலும் முற் றாக மறைந்துவிட்டன.

வரதராஜப்பெருமாள் கோயிலின் பின்புறத் திருச்சுற்று மாளிகையிலே சில ஓவியங்கள் காணப்படுகின்றன. வரதராஜரின் கருட வாகனம் பிரமாண்டமான உருவத்திலே அங்கு சித்திரமாக அமைந்துள்ளது. அதன் இருபக்கங்களிலும் பெருங் குடைகளும், சாமரைகளும்,வேறு சின்னங்களும் வரையப்பெற்றுள்ளன.

கருடாழ்வார் திருவிழாக் காட்சியின் உருவமாக இது அமைந்திருக்கின்றது. வரதராஜப் பெருமாள் கோயிலிலே வருடந்தோறும் கருடாழ்வார் உற்சவம் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்படும். இந்த ஓவியத்திலே அடியார்கள் இருவரின் உருவங்கள் தெரிகின்றன. ஒருவரின் உருவம் யானை மேல் இருந்து கொண்டு தாளவாத்தியம் செய்கின்ற அரசனுடைய கோலமாகும். பக்கத்திலே ஒரு சாதாரணமான அடியார் பக்திப் பரவசமாகி நிற்குங் கோலந் தெரிகின்றது. இவ்வுருவங்களுக்கு அருகிலே அமைந்துள்ள சித்திரத்திலே திருமகள், மணமகள், நீலாதேவி என்னுந் தேவியர் மூவர் சகிதம் விஷ்ணு அமர்ந்திருக்குங் காட்சி தெரிகின்றது. இந்த ஓவியத்திலே வண்ணங்கள் ஒளியுடன் விளங்குகின்றன. உருவங்களின் கோடுகள் நன்கு பேணப்பட்ட நிலையில் உள்ளன. அவை பதினேழாம் நூற்றாண்டிற்கு உரியனவாகலாம்.

அளவிலே மிகப் பெரியதான விஜயநகரப் பேரரசில் அடங்கிய பிரதேசங்கள் ஒவ்வொன்றிலுஞ் சில அம்சங்களிற் தனித்துவமான மரபுகள் காணப்பட்டபோதும் அவற்றிடையே ஒரு பொதுவான கலைப்பாணிக்குரிய சிறப்பம்சங்கள் விரவியிருந்தமையினை அவதானிக்க முடிகின்றது. கஜபதி மன்னர்களின் ஆட்சியின் கீழ் அமைந்த கலிங்க தேசத்திலும் விஜயநகர பாணியில் ஏற்படலாயிற்று.

### 4. திருவலஞ்சுழி ஓவியங்கள்

திருவலஞ்சுழியுள்ள கபர்த்தீஸ்வரர் கோயிலிற் பதினேழாம் நூற்றாண்டில் வரையப் பெற்ற சிறப்பு வாய்ந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. அங்குள்ள மண்டபத்தின் விதானத்திலே சிவபெருமானுடைய லீலைகள் வனப்புமிக்க கோலத்தில் வரையப் பெற்றுள்ளன. பிரதேச ஸ்தவம் ஓரிடத்தில் சிறப்புடன் விளங்குகின்றது. சிவனுடைய ஆட்டத்திற்கு ஒத்திசைவாக வாத்தியக்காரர் இசைக் கருவிகளை மிளற்றுங் கோலத்திலே காணப்படுகின்றனர்.பல கரங்களைக் கொண்ட சிவன் வாசுகியுடன் கூடி உத்வேகமாக ஆடுந்தாண்டவக் கோலந் தெரிகின்றது. வாசுகி கழன்று திருவாசி போல் அமைந்திருக்கும் காட்சி தெரிகின்றது. தாண்டவத்தின் வேகத்தினால் முடியில் அணிந்திருந்த மணிகள் எல்லாம் விழுந்து சிதறிக் காணப்படுகின்றன.

(தொடரும்)

# பொன்சேகாவுக்கு சேறுபூச மேற்கொள்ளும் மற்றொரு நாடகமே முஸம்மில் விவகாரம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்நாட்டில் சிறந்த மாற்றத்தையும், நம்பிக்கையையும், ஜனநாயகத்தையும் ஏற்படுத்தி மக்களின் வாழ்வில் சிறந்ததொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தவெனவே சரத் பொன்சேகா தேர்தலில் போட்டியிடுகின்றார். அவருக்கு சேறு பூசுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் நாடகங்களில் ஒன்றுதான் முஸம்மிலுக்கு 3 கோடி ரூபா இலஞ்சம் கொடுத்ததாகக் கூறப்படும் சம்பவமாகும் என்று ஐ.தே.க.வின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.


குண்டசாலைத் தொகுதியின் மெனிக்ஹின்ன என்ற இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்தும் பேசுகையில், இன்று பொதுவேட்பாளரான பொன்சேகாவுக்கு மக்களின் ஆதரவு பெருகி வருவதைக் கண்டு ஆளும் தரப்பினர் அதிர்ச்சியடைந்தும், ஆவேசம் கொண்டும் வருகின்றனர். இதனால் அவருக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களைத் தாக்கி சேதப்படுத்துகின்றனர். ஆதரவாளர்களை மிரட்டுகின்றனர். துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். அது மட்டுமன்றி குண்டர்களை ஏற்படுத்தி வன்முறைகளையும் மேற்கொள்வதோடு அவ்வாறான செயல்களை ஐக்கிய தேசிய முன்னணியின் மீது திசை திருப்பவும் சாதுர்யமாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் இவற்றைப் புரிவது யார்? இவற்றின் பின்னணியில் செயற்படுபவர்கள் யார்? என்பதெல்லாம் மக்களுக்கு நன்கு புரியும். இதனால்தான் பெரும்பாலானோர் அவருக்கு ஆதரவு நல்க திரண்டு வருகின்றனர். இன்று மக்களை ஏமாற்றி, நாட்டை ஏமாற்றி ஊழல் மிக்க ஆட்சியை மேற்கொண்டுவரும் அரசை வீட்டிற்கு அனுப்பி நாட்டு மக்கள் வசதிகளோடும், வாய்ப்புக்களோடும் வாழவேண்டும் என்ற நோக்கிலேயே நாட்டில் நம்பிக்கையான மாற்றத்தைக் கொண்டு வர ஜெனரல் போட்டியிடுகின்றார் என்றார்.

மேலும் அரசியலில் பிரபலமற்ற 300 வாக்குகளைக்கூட பெற்றுக் கொள்ள முடியாத முஸம்மிலுக்கு மூன்று கோடி ரூபா இலஞ்சம் கொடுத்து ஐ.தே.க. அவரை ஈர்க்க முயற்சித்ததாக சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இதில் பிரதான பாத்திரத்தை விமல் வீரவன்ஸ ஏற்றுள்ளார். இவ்வாறானவர்களை மூன்று கோடி ரூபா இலஞ்சப் பணம் கொடுத்து ஈர்க்க வேண்டிய அவசியம் ஐ.தே.க.வுக்கு இல்லை. அவ்வாறு மூன்று கோடி ரூபா பணம் இருப்பின் நாம் எமது கட்சி அமைப்பாளர்களுக்குப் பகிர்ந்தளித்து கட்சியின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



(2-6)

# அச்சம் தரும் வகையில் தேர்தல் வன்முறைகள்

## இல. கத்தோலிக்க ஆயர் சம்மேளனம்

தேர்தல் தொடர்பான வன்முறைகள் அச்சம் தரும் வகையில் அதிகரித்துச் செல்வது தொடர்பாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சம்மேளனம் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறவேண்டுமானால் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக கொள்கை ரீதியிலான விடயங்களை முதன்மைப்படுத்தி பல்வேறு விடயங்களை வெளியிடக்கூடிய சுதந்திரம் அவசியமென அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அந்தச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக சகல மட்டங்களிலும் இடம்பெறும் வன்முறைகளைத் தடுப்பதோடு வேட்பாளர்களுக்கும் அவர்களின் அரசியல் கட்சிகளுக்கும் எதிரான அவதூறுகளை வெளியிடுவதற்குப் பதிலாக வாக்காளர்களைத் தெளிவுபடுத்துவதற்கான விவாதங்களை மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் தம்மிடமுள்ள வாக்கை அச்சமின்றி மற்றும் கட்சிப்பற்றுடன் பயன்படுத்த சகல வாக்காளர்களுக்கும் உரிமை இருப்பதோடு அதனை ஒதுக்குவதற்கு முடியாதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பேரன் ஜனாதிபதிக்கு ஆதரவு

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனவின் பேரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தொடர்ந்தும் ஓர் ஜனநாயகக் கட்சியாக கருத முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து சமாதானத்தை ஏற்படுத்திய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனைவரும் வாக்களிக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வோர்ட் பிளேஸில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## புதிய ராடர் கட்டமைப்பு

மூன்று மணித்தியாலத்தின் பின்பு நிலவப் போகும் காலநிலை தொடர்பில் நிலையான எதிர்வு கூறக்கூடிய புதிய ராடர் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

டொப்லர் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புதிய ராடர் கட்டமைப்பு அதியுயர் தொழில்நுட்ப வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. தெனியாய, கொங்கல பிரதேசத்தில் இந்த கட்டமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியின் உதவியினால் முகில்களின் அசைவுப் போக்குகள், மழையின் தன்மை, காற்றின் வேகம், மின்னல் அபாயம் குறித்த தகவல்களைக் குறுகிய நேரத்துள் அறிந்து பொதுமக்களுக்கு அறிவிக்க முடியுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கிறது.

இந்த ராடர் கட்டமைப்பிற்கென 40 கோடி ரூபா செலவில் இவ்வாண்டு முடிவிற்குள் நிறுவ எதிர்பார்ப்பதாகத் திணைக்களம் கூறுகிறது. (2-6)

# யாழ். மாவட்டத்தில் மூலிகைப் பயிர்ச் செய்கை

உலகத் தரைத்தோற்றத்திலே அயன மண்டல நாடுகளான இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மூலிகைத் தாவரங்களில் பல்வகைமை மிகவும் செறிவாகவும் சிறப்பாகவும் கொண்டுள்ளன என்பது உண்மை. அந்த வகையில் வடபகுதி இந்தியாவிற்கு மிகவும் அண்மையில் காணப்படுதால் கீழைத்தேச மருத்துவங்களின் தோற்றம் பெற்ற நாடான இந்தியாவில் இருந்து தோன்றிய அனைத்து மருத்துவ முறைகளின் மூலமாகிய மூலிகைத் தாவரங்கள் இங்கு காணப்படுவதும், இலங்கையின் வடபகுதியில் மட்டும் காணப்படும் அரிய பல மூலிகைத் தாவரங்களும் இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் வளரும் பல மூலிகைகள் தூய இனங்களாக (Genune Species) இனங்காணப்பட்டுள்ளன. உதாரணமாக அறுகு, சிறு நெருஞ்சில், சந்தனம், கோழியவரை, அமுக்கரா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு அரியளவில் காணப்படும் மூலிகைகளை பரந்த அளவில் பயிர்செய்து அறுவடை செய்யக்கூடிய தன்மைகளை யாழ்ப்பாணம் அதன் தரைத்தோற்ற அமைப்பு மூலம் தன்னகத்தே கொண்டுள்ளது. வெப்ப வலய நாடுகளில் உள்ள மூலிகைகளே அதிக வேதியல் பொருட்களைக் கொண்டுள்ளன. மூலிகைகள் மூலத்தை ஆதாரமாகக் கொண்டவை வெப்ப வலய நாடுகளில் வளரும் தாவரங்களில் உயர் சத்துக்களும் கனிமங்களும் அதிகமான செறிவில் காணப்படுகின்றன. இவ்வாறு பார்க்கும் போது வேதியல் ரீதியான பெறுமானமும் போசாக்குப் பெறுமானமும் அதிகமாகக் காணப்படுவது யாழ்ப்பாணத்தில் வளரக் கூடிய மூலிகைகளிலேயே ஆகும்.

இவ்வளவு வசதிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் சித்த மருத்துவ மருந்து தயாரிப்பிற்குத் தேவையான உலர் மூலிகைகள் விற்பனை செய்கின்ற நிலையங்களில் நாம் ஆய்வு செய்தபோது அங்கு பல உலர் மூலிகைகள் இந்தியாவில் இருந்து அதிக விலையில் இறக்குமதி செய்வது அவதானிக்கப்பட்டது. இதனால் நம் நாட்டுப் பணம் விரயமாவதுடன் இந்த மூலிகைகள் இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தப்பட்டு வரும்போது அவ்வுலர் மூலிகைகள் ஆயுட்கால (Life span) முடிவுறும் திகதிகளிலேயே வருவதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இதனால் மூலிகைகளின் மருத்துவ வேதியல் பொருட்கள் குறைவடைவதுடன் அதனைப் பயன்படுத்தி செய்யப்படும் மருந்துகளின் தரம், நோய் தீர்க்கும் திறன் என்பனவும் குறைவடைந்து செல்கின்றன.



இவற்றைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் பயிரிடக்கூடியதும் உருவவியல் ரீதியாக அடையாளப்படுத்தப்பட்டதுமான சில மூலிகைகளை முன்னோக்கிய பயிர்ச் செய்கையாக ஆரம்ப கட்டத்தில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் நாம் பல பிரதேச செயலர் பிரிவில் மூலிகை விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை பல மட்டங்களில் நிகழ்த்தி உள்ளோம். அவ்வாறு விவசாயிகளிடையே மூலிகைப் பயிர்ச் செய்கை பற்றிய கருத்தரங்கை நிகழ்த்தியபோது அவர்களில் பலர் மூலிகைப் பயிர்ச் செய்கையால் வரும் இலாபங்களைப் பட்டியற்படுத்தியபோது அவர்கள் மூலிகைப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டியதை அவதானித்தோம். இவ்வாறான நிகழ்வுகள் விவசாயிகளிடையே மூலிகைப் பயிர்ச் செய்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உந்து சக்தியாக இருந்தது.

எவ்வாறாயினும் இன்றைய உலகில் புதுமையை எவ்வளவுதான் படைத்தாலும் பழைமையின் அடிப்படை, அடித்தளம் மறுக்கவும், மறைக்கவும் படவில்லை என்பதே உண்மை. அந்த வகையில் இன்று உலகில் மூலிகைப் பொருட்களுக்கான கேள்வி கூடியுள்ள நிலையில் (Herbal products) மூலிகைத் தாவரங்கள் பாதுகாக்கப்படுவதும், அருகி வருகின்ற மூலிகை இனங்களை காக்க வேண்டிய ஒரு நிலையும் உள்ளது.

விவசாயிகள் மூலம் இதனைப் பயிரிடுவது, அவர்களின் விவசாயத்தில் உள்ள அனுபவத்திறனும் சேர்வதால் வெற்றிகரமான மூலிகைப் பயிற்ச் செய்கைக்கு நிச்சயமாக வழிவகுக்கும். இதனால் நம் நாட்டுக்கேயுரிய மருத்துவம் நம் மக்களால் வளர்க்கப்படுவதுடன் மூலிகைகள் மூலம் மருந்துகள் உடனுக்குடன் தயாரிக்கும்போது வேதியல் பொருள் குறையாமலும் அன்னிய செலாவணியை மீதப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

இவ்வாறு உற்பத்தி செய்யும் மூலிகைகளை அறுவடை செய்யும் பட்சத்தில் சிறந்த நிர்வாக கட்டமைப்புகளுக்கூடாக அவற்றை மருந்து செய் நிலையங்களிற்கு தருவிப்பதன் மூலம் விவசாயிகளால் உற்பத்தி செய்தவற்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவர்களின் உற்பத்தியை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மூலிகைக் கருத்தரங்குகளின் போது விவசாயிகள் மூலிகைகளைப் பயிரிட ஆர்வம் இருப்பதாகத் தெரிவித்துள்ளமை

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
**சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம், கைதடி**

யால் விவசாயம் தொடர்பான அனுபவ அறிவை உடைய இவ்விவசாயிகள் மூலம் பயிரிடுவது சிறந்த வெற்றியைத் தரும் என்பது உறுதி.

இதில் ஆர்வமுள்ள அனைவரும் குணபாடப்பிரிவு, சித்த மருத்துவத்துறையுடன் தொடர்பு கொண்டால் எம்மாலான உதவியை அவர்களின் பயிர்ச் செய்கைக்கு வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் [illegible] பயிரிடக்கூடிய மூலிகைகளைப் பயிரிடுவதன் மூலம் நம்நாட்டு மருந்து உற்பத்திக்காக பயன்படுத்துவது மட்டுமல்லாது அவற்றின் மூலம் மருந்து தயாரிக்கும் வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம்.

இவற்றின் வேதியல் பொருட்களைத் தனித்து [illegible] ஆங்கில மருந்தும் [illegible] அவர்களிற்கும் இவற்றை விற்பனை [illegible] முடியும். (தொடரும்)

சந்தோசமாக இருக்கும் நேரத்தில் குறுக்கே வந்து நிற்கும் முற்றுப்புள்ளி மனச்சாட்சி
-ஸ்டாலின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பால் இந்த நாடு வெட்கித் தலைகுனிய வேண்டும்

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு பதவியில் இருந்து விலகப்போவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை நீதியாக, நேர்மையாக நடத்த முடியவில்லை என்பது அவரிடம் இருக்கக்கூடிய ஆதங்கம்.

பதவியில் இருந்தால் அந்தப் பதவிக்குரிய கடமையை பக்கம் சாராமல் செய்யவேண்டும் என்ற உயரிய இலக்குடன் செயற்படுபவர் அவர்.

பதவிகளுக்காக அங்கும் இங்கும் தாவித் திரியும் மாந்தர்கள் வாழும் இலங்கைத் தீவில் இப்படியும் ஒருவர் என்று போற்றக்கூடியவராக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க இருப்பது இலங்கை மக்கள் ஏதோவொரு வகையில் புண்ணியம் செய்தவர்கள் என்று தான் கூறவேண்டும்.

தேர்தல் என்று வந்துவிட்டால் அதனை நீதியாக நடத்தி முடிப்பது தேர்தல் திணைக்களத்தின் தலையாய கடமை. இதற்காக தேர்தல் ஆணையாளருக்கு விசேட அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இருந்தும் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாமல் இருப்பது தனக்கு விருப்பானது அல்ல எனத் தேர்தல் ஆணையாளர் கூறியிருப்பது குறித்து இந்த நாடு வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தேர்தலை நீதியாக நடத்த முடியவில்லை என்ற ஆதங்கத்தை எந்த வகையிலும் வெளிப்படுத்த முடியாமல் தவித்த தேர்தல் ஆணையாளர், தனது பதவியை இராஜினாமா செய்தேனும் உண்மையை உணர்த்த முற்பட்டுள்ளார்.

அதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு தனது பதவியை இராஜினாமாச் செய்வுள்ளதாக அவர் நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் இந்த அறிவிப்பை ஆழ்ந்தகன்று சீர்தூக்கின் தேர்தல் பிரசாரங்கள் எல்லாம் பொய்மையானவை. மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். நாட்டில் நீதியில்லை, நியாயமில்லை, நேர்மையில்லை என்ற பொருள் தெளிவாகும்.

எனவே தேர்தல் ஆணையாளர் தனது பதவியை இராஜினாமாச் செய்யும் அளவிற்கு வந்துள்ளார் என்பது இந்த நாட்டில் பொலிஸ், நீதிபரிபாலனம், அரச ஊடகங்கள் என அனைத்துமே பக்கசார்புடையவை என்பதை சுட்டி நிற்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் தனது பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளேன் என்று எந்த நாட்டின் தேர்தல் ஆணையாளர் ஒருவர் அறிவித்திருந்தாலும், அந்த நாட்டின் அரசு, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் என அனைவருமே கூண்டோடு இராஜினாமாச் செய்திருப்பர்.

ஆனால், இந்த நாட்டில் "ரோசங் கெட்டவன் இராசாவிலும் பெரியவன்" என்ற கோட்பாடு நடைமுறையில் இருப்பதால், எவர் எதைச் சொன்னாலும் அதை எல்லாம் செவிமடுக்காமல் தங்கள் தங்கள் எண்ணப்படி ஆட்சி செய்வது பழக்கப்பட்ட விடயமாகிவிட்டது.

## வடக்கு-கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் உட்கட்டுமான அபிவிருத்திக்கான 3 திட்டங்களுக்கு உலக வங்கி நிதியுதவி

வடக்கு-கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் உட்கட்டுமான அபிவிருத்திக்கான மூன்று திட்டங்களுக்கு உலக வங்கி ரூபா 21 பில்லியன் (182 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்குகின்றது.

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் ரூபா 21 பில்லியன் (182 மில்லியன் அமெரிக்க டொலர்) மாகாண வீதித் திட்டம், வடக்கின் துரித மீட்சித் திட்டம் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை அமுல்படுத்தித்தர இணங்கியுள்ளது.

மாகாண வீதித் திட்டத்திற்காக வீதிகளைத் தரமுயர்த்தும் பொருட்டு ரூபா 12 பில்லியன் (105 மில்லியன் டொலர்) செலவிடப்படவுள்ளது. இதில் ஊவா மாகாணத்தில் 150 கிலோ மீற்றர் நீளமான வீதியும், கிழக்கு மாகாண அம்பாறை மாவட்டத்தில் 100 கிலோ மீற்றர் வீதியும், வடக்கு மாகாண யாழ்ப்பாண மாவட்டத்தில் 100 கிலோ மீற்றர் வீதியும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஊவா, கிழக்கு மற்றும் வடமாகாணங்களில் வீதி அபிவிருத்தியின் மூலம் மக்களின் சமூகப் பொருளாதா ரத்தை முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது. இதன் மூலம் விவசாயத்தை தமது பொருளாதார வளமாகக் கொண்ட இம் மக்கள் தமது உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை யைப் பெறக் கூடியதாக இருக்கும் என குறிப்பிடப்படுகிறது.

உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளான வடக்கு மாகாண மக்களின் மீள்குடியேற்ற, மீள் நிர்மாணம் சம்பந்தமான அரசின் வேலைத்திட்டத்திற்கு வடக்கின் துரித மீட்சித் திட்டம் துணை நிற்கின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் அவசரப் பண உதவியின் மூலம் அவர்கள் தமது அழிவுற்ற வீடுகளை திருத்தி அமைக்கவும், தொழிலினைச் சிறிய அளவில் தொடங்கவும், அடிப்படைக் கட்டுமான வசதிகளை மேம்படுத்தவும் பெரிதும் உதவியாய் அமையும். அரசினால் திட்டமிடப்பட்ட ஐந்து கட்டங்களில், கட்டம் 3 மற்றும் 4இல் உள்ள ஒரு இலட்சம் உள்ளக இடம்பெயர்வுக்கான மக்களை மீளக்குடிய மர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. இதற்காக உலக வங்கி ரூபா 7.5 பில்லியன் (65 மில்லியன் டொலர்கள்) ஒதுக்கியுள்ளது.

மேலும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள மிகவும் நலிவடைந்த, பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட, அங்கவீனமுற்றவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மேலும் 1.4 பில்லியன்களை (12 மில்லியன் டொலர்) மேலதிகமாக வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது. இத்தொகையானது இடம்பெயர்ந்த வடக்கு மக்களின் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத வாழ்க்கைதர முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் நீர்ப்பாசன புனரமைப்புக்கும் பெரிதும் உதவியாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மூன்று திட்டங்களுக்காக நிதியீட்ட உடன்படிக்கை நிதி திட்டமிடல் அமைச்சின் சார்பாக நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி. பி. ஜெயசுந்தரவும் உலக வங்கியின் சார்பில் உலக வங்கி வதிவிடப் பணிப்பாளர் ந. கோ. இஸ்கினியினாலும் அண்மையில் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-30)

## இலங்கை முகாம்களில் உள்ள மாணவரின் கல்விக்காக ஆசிரியர்களை அனுப்ப முடிவு

### சென்னை பல்.துணைவேந்தர் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் உள்ள தமிழ் மாணவர் களின் மேற்படிப்புக்காக சென்னை பல்க லைக்கழகத்தின் ஆசிரியர் குழு இலங்கை செல்லவிருக்கின்றது என சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் திருவாசகம் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது, இலங்கை முகாம் களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் மாண வர்களுக்கு நூறு சதவீதம் முழுமையான இலவசக் கல்வியை அளிக்கவுள்ளோம். அதற்கான ஆலோசனைக் கூட்டம் பல்கலை வளாகத்தில் நடந்தது. எம்.பி. கனிமொழி, இலங்கை துணை தூதர் வடிவேல் கிருஷ்ண மூர்த்தி மற்றும் பலர் பங்கேற்றனர்.

இதன்மூலம் இலங்கையில் உயர்தரம் படித்துவிட்டு, தமிழக முகாம்களில் தங்கியுள்ள தகுதி வாய்ந்த 4ஆயிரம் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியர் சென்னைப் பல் கலைக்கழக உதவியுடன் மேற்படிப்பு படிக்க உள்ளனர். ஆங்கில அறிவு குறைவாக உள்ளவர் களுக்கு, மூன்று மாதம் பயிற்சியளித்து, அவர்களை மேற்படிப்புக்கு அனுப் பவுள்ளோம். இலங்கையில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களுக்கும் மேற்படிப்பு அளிக்க உள்ளோம். இதற்கு, இலங்கை அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கையில் தேர்தல் முடிந்த பின்பு அதற்கான பணிகள் தொடங்கும். சென்னைப் பல்க லையில் உள்ள ஆசிரியர் குழுவினர் இலங்கை செல்லவுள்ளனர். அக் குழுவினருடன் சேர்ந்து நானும் இலங்கை சென்று தழிழர்களின் மேற்படிப்புக்கு உதவி செய்யவுள்ளேன். இவ்வாறு துணைவேந்தர் திருவாசகம் கூறியுள்ளார். (2-6)

## விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயலமர்வு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்ட விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயலமர்வு வேம்படி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (4-6)

## நல்வழிகாட்டும் தெய்வீக குரு பகவான் பாபா

ஒருமுறை இந்தியாவில் ஒரு கணவனும் மனைவியும் சத்தியத்தை தேடியலைவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். ஒன்றுக்குப் பின் ஒன்றாக பல சமயக் கொள்கைகளைப் பின்பற்றினார்கள். இருந்தும் அதில் ஒவ்வொரு படியும் அவர்களுக்கு ஓரளவு ஞானத்தை அளித்தது. ஆனால் பாதுகாப்பு மட்டும் கிட்டவில்லை. இலக்கை அடைவது எவ்வாறு என்பது பற்றி தெளிவாக விளக்குபவர் அவர்களுக்கு யாரும் இல்லை.

சத்திய தரிசனத்தைத் தேடும் மாணாக்கர்களை போல கிறிஸ்து ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறார். அவர் வழிகாட்டுவார் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இறுதியாக குரு ஒருவரைப் பற்றி கேள்விப்பட்டு அவரையும் அவருடைய போதனைகளையும் பின்பற்றத் தொடங்கினார்கள்.பல உண்மைகளை அவர் கற்பித்துத் தந்த போதிலும் அவர்களுக்குள்ளே ஆன்மீகப் புரட்சி சுழன்று கொண்டேயிருந்தது.

"கடவுளை ஏன் அறிந்து கொள்ள முடியவில்லை? ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெற முடியும் என்றால் நாம் மட்டும் ஏன் பெறவில்லை?" என்று தங்களையே கேட்டுக்கொண்ட போதிலும் பதில் கிட்டவில்லை. இறுதியாக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வீகக்குருவை நோக்கி உரத்த குரலில் உண்மையாகப் பிரார்த்தித்து தங்களிடம் வந்து தம்மை இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் படி வேண்டுவதென முடிவு செய்தனர். உலகில் அவதரித்துள்ள தெய்வீக குருவுக்கும் அவர்களின் நிலை நன்றாகவே தெரிந்திருந்தது. அவர்களின் ஏக்கம் நிறைந்த குரலுக்கு செவிசாய்க்கவும் செய்தார். அவர் பூமியில் அவதாரம் செய்தது அத்தகையவர்களின் பொருட்டேயல்லவா?. அதனைப் பற்றி அத்தம்பதியரே கூறுகின்றார்கள். "முடிவு செய்த மறுநாளே நண்பர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்து பகவான் சாயியின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய புத்தகம் ஒன்றைக்கொடுத்தார். அதனைப் படிக்கும் போதே சலனமற்ற அமைதி எம்முள் நிரம்பியதை உணர்ந்தோம். எங்கள் பிரார்த்தனைக்கு கடவுள் செவி சாய்த்து விட்டார்" என்றனர். அன்று முதல் அவர்கள் வாழ்வில் அவருடைய அருள் நிறைந்த ஆசிகளும் அற்புதங்களும் நிகழ ஆரம்பித்தன. பகவானை கண்ணால் தரிசிக்கும் பேற்றை அடையாத போதே அவர் பல வழிகளிலும் அத்தம்பதியருக்கு அவரைப் பற்றி அறிவித்தார். பின்னொருநாள் பகவானிடமிருந்து அழைப்பு வரப்பெற்றவர்களாய் அவ்விருவரும் புட்டபர்த்திக்கு புறப்பட்டுச் சென்றனர்.



ஜெய்சாயிராம் யாதவன்

# ஒருவர் பொய் பேசுகின்றாரா ?

# கையெழுத்தில் கண்டுபிடித்துவிடலாம்

## இஸ்ரேல் விஞ்ஞானி தெரிவிப்பு

(ஜெருசலேம்)

ஒருவர் உண்மை பேசுகிறாரா அல்லது பொய் பேசுகிறாரா என்பதை அவரது கையெழுத்தை வைத்தே கண்டுபிடித்துவிடலாம் என்று இஸ்ரேலைச் சேர்ந்த விஞ்ஞானி கில்லூரியா தெரிவித்துள்ளார்.

தனது நீண்டகால ஆய்வின் மூலம் இது தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவர் உண்மை பேசுகிறாரா அல்லது பொய் பேசுகிறாரா என்பதைக் கண்டறிய ஏற்கனவே பல வழிகள் பின்பற்றப்படுகின்றன.

இவற்றின் மூலம் ஒருவரின் நேர்மை, நேர்மையின்மையை துல்லியமாகக் கண்டுபிடித்திட இயலாது.

ஆனால் நான் கண்டுபிடித்துள்ள புதிய முறை மூலம் ஒருவரின் பேச்சின் நேர்மையை துல்லியமாகக் கண்டுபிடித்துவிடலாம் என்றும் கில்லூரியா கூறினார்.

மேலும் ஒருவரது பேச்சின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழும் பட்சத்தில் அவரிடம் வெள்ளைத்தாளை அளித்து அதில் நிறைய வாசகங்களை எழுதுமாறு அவரை பணிக்க வேண்டும்.

அவ்வாறு எழுதும்போது அவர் எழுதும் விதம், எழுத்தின் அழகு உட்பட சில விடயங்களை ஆராய்ந்தால் அவர் உண்மையை பேசுபவரா அல்லது புளுகு மூட்டையை அவிழ்த்துவிடுபவரா என்பதை கண்டுபிடித்துவிடலாம் என்று லூரியா மேலும் கூறினார். (2-6)

# கண்களை பாதிக்கும் நடவடிக்கைகள்

(மெல்போர்ன்)



அதிக நேர வீடியோ கேம், கம்ப்யூட்டர் மற்றும் வீட்டுப் பாடம் ஆகியவை குழந்தைகளின் பார்வையைப் பாதிக்கும் என்று அவுஸ்திரேலிய கண்மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதுபற்றி பிரிஸ்பேனைச் சேர்ந்த டாக்டர் கேத் ஜான்சன் கூறுகையில்,

குழந்தைகளின் இப்போதைய வாழ்க்கை முறையால் 6 வயதிலேயே கண்ணாடி அணிகின்றனர். அதிக நேரம் கம்ப்யூட்டர் திரையைப் பார்ப்பது, வீடியோ கேம் விளையாடுவதே இதற்கு முக்கிய காரணம் என்றார்.

குழந்தைகளின் வெளிப்புற விளையாட்டுகள் குறைந்துவிட்டதால் உடல் நலனுக்கு ஆபத்து அதிகரிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார். (2-6)

# நைஜீரியாவில் இடம்பெற்ற கலவரத்தில் 800 பேர் பலி

(சுனோ)

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் 2 பிரிவினருக்கு இடையே நேற்று முன்தினம் கலவரம் மூண்டது. மத்திய நைஜீரியாவில் பிளாட்டு மாகாணத்தின் தலைநகரான ஜோஸ் நகரில் பயங்கர கலவரம் வெடித்தது.

ஒருவரை ஒருவர் துப்பாக்கி, கத்தி போன்றவற்றால் தாக்கிக் கொண்டனர்.

இச் சம்பவத்தில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டதுடன் 800 பேர் காயமடைந்தனர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் தெருக்களில் ஆங்காங்கே கிடப்பதாகவும் அவர்களின் உடல்களை இரு பிரிவினரும் தங்கள் பகுதிக்கு எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர அந்நாட்டு இராணுவமும் பொலிஸாரும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இருந்தும் கலவரத்தை அடக்கமுடியவில்லை. இந்தக் கலவரம் புகுரு நகருக்கும் பரவி உள்ளது.

எனவே, அப்பகுதிகளில் 24 மணிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட மோதலில் 26 பேர் கொல்லப்பட்டதுடன் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 நாட்கள் கலவரம் நடந்தது. அப்போது, போர்னோ மாகாணத்தில் 800 பேர் உயிரிழந்தனர். டிசம்பரில் நடந்த மற்றொரு மோதலில் பாவ்சி மாகாணத்தில் 80 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (6)

# ஆப்கானிஸ்தானில் வருடாந்தம் 2.5 பில்லியன் டொலர் இலஞ்சமாக வழங்கப்படுகிறது

ஆப்கானிஸ்தானில் வருடாந்தம் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணம் இலஞ்சமாக வழங்கப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 25 வீதத்திற்கு நிகரான தொகை இவ்வாறு இலஞ்சமாக வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தல், வேலையில்லாப் பிரச்சினையை விடவும் ஆப்கானிஸ்தான் மக்கள் கூடுதலாக ஊழல் மோசடிகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் குறைந்தபட்சம் வருடத்தில் ஒரு தடவையேனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இலஞ்சம் வழங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மொத்த வருமானம் 425 அமெரிக்க டொலர்கள் எனவும் சராசரி இலஞ்சம் வழங்கும் தொகை 160 அமெரிக்க டொலர்கள் எனவும் காவல் துறையினர், நீதவான்கள், அரசியல் வாதிகள் என பல்வேறு தரப்பினரும் இலஞ்சம் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை சுங்கப் பிரிவு அதிகாரிகளே அதிகளவு இலஞ்சம் பெற்றுக் கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (6)




# பாகிஸ்தானின் பொதுக் கல்விமுறையை புதுப்பிக்க அமெரிக்கா திட்டம்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் தீவிரவாதத்தை தோற்கடிப்பதற்கான அமெரிக்காவின் முயற்சிக்கு அந்த நாட்டுக் கல்வி முறை தடையாக இருப்பதால், அதை மாற்றி அமைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அந்த நாட்டு கல்விமுறை வன்முறையை பெருமைப்படுத்துவதாகவும், அதை உயர்த்தி புகழுக்குரிய செயலாகக் காட்டுவதாகவும் உள்ளது என்று அமெரிக்கா கருதுகிறது. இந்தப் போதனை முறைதான் மீண்டும் மீண்டும் தற்கொலை தாக்குதலில் தீவிரவாதிகள் ஈடுபடுவதற்குக் காரணம் என்றும் அமெரிக்கா கருதுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அறிவியல், கணிதம், வரலாறு ஆகிய பாடங்கள் அந்த நாட்டில் புறக்கணிக்கப்படுவதாகவும் அமெரிக்கா கருதுகிறது.

இதனால் அந்த நாட்டில் பொதுக் கல்வி முறையைப் புதுப்பிப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்காக அந்த நாடு 1000 கோடி ரூபாவை செலவிடவும் இருக்கிறதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# ஊழல் வழக்கில் சிக்கிய நீதிபதிக்கு ஆயுள் தண்டனை

(பீஜிங்)

சீன உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதிக்கு ஊழல் வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீன உயர் நீதிமன்றின் துணைத்தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவர் ஹுவாங் சுவாங்யு. கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள சான்ஜியாங் நீதிமன்றின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றினார்.

அப்போது, பொதுமக்கள் பணத்தை முறைகேடாக பயன்படுத்தியது, இரண்டரை கோடி ரூபாய் வரை இலஞ்சம் வாங்கியது தொடர்பாக, இவர் மீது மற்றொரு நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

சீனாவில் ஊழல் செய்தால், அதிக பட்சமாக மரண தண்டனை வரை அளிக்கப்படுகிறது. ஊழல் செய்ததை ஹுவாங் சுவாங்யு ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து, அவருக்கு லாங்பாங் பகுதி நீதிமன்றம், ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியுள்ளது.

ஊழல் வழக்கில் அதிக பட்ச தண்டனை பெற்ற இரண்டாவது முக்கிய நபர் சுவாங்யு ஆவார். முன்னதாக கம்யூனிஸ்ட் தலைவர் செனலியாங் யூ பென்சன் நிதி ஊழல் வழக்கில் 18 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)



அமெரிக்க அதிபராக பராக் ஒபாமா பதவியேற்று ஓராண்டு நிறைவுபெற்றதை முன்னிட்டு லண்டன் நகரில் அவரது உருவிலான மெழுகுப் பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அங்கு வைக்கப்பட்டுள்ள ஒபாமா, மிசேல் ஒபாமாவின் மெழுகுச் சிலைகளைப் படத்தில் காணலாம்.

# துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் வெர்ஜீனியாவில் 8 பேர் பலி

வெர்ஜீனியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் எட்டு பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிதாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் இவ்வாறு எட்டு பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

என்ன காரணத்திற்காக இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதென்பது இதுவரையில் கண்டறியப்படவில்லை.

தற்போது இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு இடம் நகர்த்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

# இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் அசத்தல்; பங்களாதேஷிற்கு வெற்றி இலக்காக 415 நிர்ணயம்



(சிட்டாக்கொங்)

காம்பீரின் சிறப்பான சதத்தின் மூலம் இந்திய அணி 2-வது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 413 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக 415 ஓட்டங்களை இந்திய அணி நிர்ணயித்தது. பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 17 ஆம் திகதி சிட்டாக்கொங்கில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 243 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 242 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் ஒரு ஓட்டத்தால் முன்னிலையிலிருந்த இந்திய அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் ஒரு விக்கெட்டையிழந்து 122 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் 4 ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர்-மிஷ்ரா ஜோடி சிறப்பான இணைப் பாட்டத்தை வழங்கினர்.

இதில் காம்பீர் 60 பந்துகளிலும் மிஷ்ரா 69 பந்துகளிலும் அரைச் சதத்தைக் கடந்து அசத்த இந்திய அணி 150 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் தனது முதலாவது அரைச் சதத்தைக் கடந்த அமித் மிஷ்ரா 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து ராகுல் ராவிட் களமிறங்கி நிதானமான ஆட்டத்தை வழங்க இந்திய அணி 42.1 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் ஆரம்பம் முதலே சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கௌதம் காம்பீர் 118 பந்துகளில் டெஸ்ட் அரங்கில் தனது 10-வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எனினும் கௌதம் காம்பீர் 129 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 116 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய டெண்டுல்கர் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ராவிட் 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய லக்ஷ்மன் டெண்டுல்கருடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வழங்க இந்திய அணி 52.5 ஓவர்களில் 250 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் டெண்டுல்கர் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 57.4 ஓவர்களில் 272 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய யுவராஜ் சிங் 25, தினேஷ் கார்த்திக் 27, சகீர்கான் 20 ஓட்டங்களை எடுத்து ஓரளவு பிரகாசித்து ஆட்டமிழந்தனர்.

இதில் ஒரு முனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய லக்ஷ்மன் அரைச் சதத்தைப் பெற இந்திய அணி 87 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 413 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் 69 ஓட்டங்களையும் இஷாந்த் சர்மா 7 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித் தலைவர் சகிப் அல் ஹசன், மகமுடுல்லா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் இஸ்லாம், சஹாடாட் ஹுசைன் மற்றும் ரூபெல் ஹுசைன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 415 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 2 விக்கெட்டுக்களையிழந்து 67 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் தமீம் இக்பால் 23, மொகமட் அஷ்ரபுல் 16 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்து வீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியின் 5 ஆவதும் இறுதி நாளுமான இன்று பங்களாதேஷ் அணி வெற்றி பெறுவதற்கு 8 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 348 ஓட்டங்களை எடுத்தாக வேண்டும்.

# இந்தியாவுக்கு எதிரான தொடர்; தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

(ஜோகனஸ் பேர்க்)

சிமித் தலைமையிலான தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டியில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான் முதலாவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் பெப்ரவரி 6 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் பெப்ரவரி 14 ஆம்திகதி ஆரம்பமாகின்றது. முதல் ஒரு நாள் போட்டி ஜெய்பூரில் பெப்ரவரி 21 ஆம் திகதியும் 2-வது ஒரு நாள் போட்டி கான்பூரில் பெப்ரவரி 24 ஆம் திகதியும் 3-வது ஒரு நாள் போட்டி அகமதாபாத்தில் பெப்ரவரி 27 ஆம் திகதியும் நடக்கின்றது.

இந்தியாவுக்கு எதிரான போட்டித் தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியில் சுழல் பந்து வீச்சாளர் போத்தா இடம்பிடித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான தென்னாபிரிக்க டெஸ்ட் அணி வருமாறு,

சிமித் (அணித்தலைவர்), அம்லா, போத்தா,மார்க் பௌச்சர், டிவில்லியர்ஸ், டுமினி, போல் ஹரிஸ், கலீஸ், ராயன் மெக்ரலான், மோர்னே, மோர்கல், பர்னல், அல்விரோ, பீற்றர்சன், பிரின்ஸ், டாலேஸ்ரையன், சோசோப்.

ஒரு நாள் போட்டிக்கான அணி:- சிமித் (அணித் தலைவர்), போஸ்மன், போத்தா, மார்க் பௌச்சர், டிவில்லியஸ், டுமினி, கிப்ஸ், கலீஸ், அல்பி மோர்கல், மோர்னே மோர்கல், பர்னல், அல்விரோ பீற்றர்சன், டாலே ஸ்ரையன், சோசோப், வான்டேர் மேர்வ்.

# கிளிநொச்சியில் மக்களை காணவில்லை...

இடங்களுக்குச் சென்றபோது அங்கு அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான எவற்றையும் காணமுடியவில்லை.

நாம் மீண்டும் எமது கிராமத்துக்கு வந்தது மகிழ்ச்சி தருகின்றது. ஆனால் அடுத்து நாம் என்னசெய்வது என்பதில் தான் குழப்பம் நிலவுகின்றது என சுப்பிரமணியம் முத்துராசு (66) தெரிவித்துள்ளார். நாம் விவசாயத்தை ஆரம்பிக்க வேண்டும் ஆனால் அதற்கான பொருட்கள் இல்லை. நாம் வெறுங்கையுடன் நிற்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களும் பணமும் வழங்கப்பட்டதாக அரசு கூறுகிறது. ஆனால் அரசினால் வழங்கப்படும் உதவிகள் மக்களுக்கு போதுமானவையல்ல என தெரிவிக்கப்படுகிறது.

எமது நாடு வறுமையானது. எனவே எம்மால் மக்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் ஒரே தடவையில் வழங்க முடியாது என இடம்பெயர்ந்த மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

எமது ஊடக நிறுவனத்தை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு அங்கு செல்வதற்கான அனுமதிகள் மிகவும் குறைவாகவே வழங்கப்படுவதுண்டு. இலங்கையில் ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவும் அவரை எதிர்த்து முன்னாள் இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகாவும் போட்டியிடுகின்றனர்.

இருவரையும் தென்னிலங்கை மக்கள் போர் வீரர்களாகவே பார்க்கின்றனர். ஆனால் இருவரும் தற்போது தமிழ் மக்களின் வாக்குகளைக் குறி வைத்துள்ளனர். அதற்காக அவர்கள் போரினால் சிதைவடைந்த சிறுபான்மை தமிழ் இனத்திற்கு பல சலுகைகளை வழங்க முற்பட்டுள்ளனர்.

கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் மோதல்களில் ஈடுபட்டு வந்தனர். தமிழ் மக்கள் தமக்கு தனித் தமிழீழம் கேட்டு போராடி வந்தனர்.

விடுதலைப்புலிகள் வசம் பெருமளவான பிரதேசம் கட்டுப்பாட்டில் இருந்தது. அங்கு அவர்களின் அரசு இருந்தது. காவல்துறை, நீதிமன்றம், வங்கியென ஒரு நாட்டுக்குரிய கட்ட மைப்பை அவர்கள் கொண்டிருந்தனர். அவர்களின் நிர்வாக தலைநகராக கிளிநொச்சி விளங்கியது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளின் பொருளாதார நிலைமை பலவீனமாகவே இருந்தது. அதற்கு போரும், அரசின் தடைகளுமே காரணம். எரிபொருளில் இருந்து சீமெந்து வரையிலான எல்லாப் பொருள்களும் தடை செய்யப்பட்டவையாகவே இருந்தன.

எனினும் விவசாயமூலம் தமது பொருளாதார வளங்களை கட்டியமைத்த விடுதலைப் புலிகள் தமது பகுதிகளில் சிறிய கடைகள், தொழிற்சாலைகள் என நிறுவியிருந்தனர். அங்கு சவர்க்காரம், கொலோன் போன்ற பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

ஆனால் கடந்த வருடம் ஜனவரி மாதம் இராணுவம்அந்தப் பகுதி மீது தாக்குதல்களை ஆரம்பித்த போது எல்லாம் காணாமல் போய்விட்டன. விடுதலைப்புலிகளும் மக்களும் மேலும் ஆழமான பகுதிக்கு தள்ளப்பட்டனர்.

சிலர் தமது விலையுயர்ந்த பொருள்களை மோட்டர் சைக்கிள்களில் எடுத்துச் சென்றனர். ஆனால் இறுதிக்கட்டத்தில் அவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டுவிட வேண்டிய நிலையே ஏற்பட்டது. விடுதலைப்புலிகளின் வங்கியில் பணம் வைப்பு செய்தவர்களின் பணமும் காணாமல் போய்விட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களின் படி 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இறுதிக்கட்ட சமரில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. 3 இலட்சம் தமிழ் மக்கள் அரசினால் பலவந்தமாக முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி தற் போது இராணுவ முகாம்களினால் நிரம்பிய நகரமாகவே காட்சி தருகின்றது. சில நூறு மீற்றர் தூரங்களுக்கு ஒரு முகாம் என கிளிநொச்சி இராணுவத்தினரால் நிரம்பியுள்ளது.

படையினரின் சுற்றுக்காவல் நடவடிக்கைகளும் அங்கு அதிகம். விடுதலைப்புலிகளின் நினைவு சின்னங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு படையினருக்கான நினைவு மண்டபங்கள் அங்கே எழுப்பப்பட்டுள்ளன.

சேதமற்ற எந்தக் கட்டடத்தையும் அங்கு காணமுடியாது. வீதிகள் வெறிச்சோடிக்கிடக்கின்றன ஏனெனில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தில் தற்போது 8 ஆயிரம் மக்களே குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முகாம்களில் தங்கியிருந்த மக்களில் 70 விகிதமானவர்கள் மீள்குடியேற்றம் மற்றும் உறவினர்களின் இடங்களுக்கு என சென்றுவிட்டதாக குணரட்ன தெரிவித்துள்ளார். ஏனையவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளதாகவும் அவர்களின் பிரதேசங்கள் சுத்தம் செய்யப்பட்டதும் அவர்கள் குடியமர்த்தப்படுவார்கள் எனவும் குணரட்ன கூறினார்.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் பணத்தை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு வழங்கியுள்ளது. மேலும் 6 மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும், 12 கூரை தகடுகளும், மறைப்பு விரிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

கரைச்சி பகுதியில் உள்ள கிராமங்களில் படையினர் சிறு மண் குடிசைகளை அமைத்து கொடுத்துள்ளனர். ஆனால் தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அவை போதுமானவையல்ல. எமது பழைய வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இது போதுமா? என இராமையா இராஜாமணி கேள்வி எழுப்பியுள்ளார். கிளிநொச்சிக்கு தெற்கே உள்ள புளியங்குளம் கிராமத்தில் உள்ள தனது குடிசையின் மறைப்புக்கு அவர் அரசினால் வழங்கப்பட்ட தகரங்களை பயன்படுத்தியுள்ளார்.

தமிழ்மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கை தொடர்பாக அரசிடம் எந்த திட்டமும் இல்லை என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அரசு தனியார்களின் காணிகளை படைத்தளங்களை அமைப்பதற்கு பயன்படுத்தி வருவதுடன் அனைத்துலக உதவி நிறுவனங்களையும் மக்களுக்கு உதவிகளை மேற்கொள்ளவிடாது தடுத்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆனால் அரசு தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை குறைக்கப்போவதில்லை என குணரட்ன தெரிவித்துள்ளார். இந்த கிராமங்களில் மீண்டும் விடுதலைப்புலிகள் தலை தூக்குவதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்ட கிராமங்களுக்கு உணவுப் பொருள்களையும், சுகாதார பொருள்களையும் வழங்கியுள்ளதாக யுனிசெப் அமைப்பின் பேச்சாளர் சுஜசினி பெரேரா தெரிவித்துள்ளார். எனினும் மக்கள் தமது பழைய வாழ்வை எட்டுவதில் மிகவும் கடினமானதாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-5)






ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவான பிரசாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று ஆரம்பித்துள்ளனர். வடக்கு–கிழக்கில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் பொன்சேகாவுக்கு ஆதரவாக தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் இந்த பிரசார நடவடிக்கைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமை யில் நேற்று ஆரம்பமாகியது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா உட்பட பெருமளவான மக்களும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர் அவர்களை படங்களில் காணலாம்.

*(நன்றி–டெய்லி மிரர்)*

## 728 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக 728 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த 12 தினங்களாக ஆயுதங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பின் ஊடக இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தேர்தல் சட்டத்திட்டங்களை மீறிய 458 முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். இதற்கிடையில் நடைபெறவுள்ள ஜனாதி பதித் தேர்தல் தொடர்பான சட்டதிட்டங்களை மீறிய சுமார் 657 வன்முறைச் சம்பவங்கள் இது வ்ரை பதிவாகியுள்ளதாக தேர்தல் வன் முறை களை கண்காணிப்பதற்கான நிலையம் அறிவித்துள்ளது. (ச–5)

## வடக்கில் பெருமளவானோருக்கு...

தற்போது பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர் அட்டைகள் தபாலகங்களில் தேங்கிக்கிடக்கின்றன.

இவ்வாக்காளர் அட்டைகளின் பெரும் எண்ணிக்கையினானோர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றமையே இதற்குக் காரணம்.

1981ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையிலேயே வடபகுதியில் 7 இலட்சம் வாக்காளர்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

அண்மைக்காலமாக அந்தப்பகுதியில் குடிசன மதிப்பீடு நடத்தப் படாமையினால் வாக்காளர்களின் எண்ணிக் கையை உறுதியாக கூறமுடியாதுள்ளது.

எமக்குக் கிடைத்த தகவல்களின் படிஇன்னும் வடபகுதியில் 3 இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கலாம் எனவும் அவர் கூறினார்.

எனினும் 90 வீதத்துக்கு மேற்பட்ட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக தபால்மா அதிபர் எம்.கே.வி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் தபாலகங்களில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

வாக்காளர் இடமாறி இருப்பின் அதற்கான பொறுப்பை தபால் திணைக்களம் ஏற்றுக் கொள்ளாதெனவும் உரிய இடங்களிலிருந்தும் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இருப்பின் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தபால் மா அதிபர் கூறியுள்ளார் என்று கபே அமைப் பின் ஊடக இணைப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (ச–5)

## சரத்பொன்சேகாவிற்கு...

இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது. எதிரணி வேட்பாளர் கலந்து கொள்ளும் கூட்டத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெறவுள்ளது என தொலைபேசி மூலம் எச்சரிக்கப்பட்டு மக்கள் அச்சத்துக்குள்ளாகின்றார்கள்.

அரசாங்கத்தின்இவ்வாறான செயற்பாடுகளை புத்திசாலித்தனமான பொதுமக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

நாட்டில் கடந்த 30 வருடகாலமாக நிலவிய இந்தகொடூர யுத்தத்தை முடிபுக்கு கொண்டுவந்த ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு களங்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் கீழ்த்தரமான முயற்சியினால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

இத்தகைய கீழ்த்தரமான முயற்சிகளை கைவிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது விருப்பத்தை தெரிவிப்பதற்கான சூழலை உருவாக்க அரசு முயலுமாறு ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச–5)

## துப்பாக்கிச் சூட்டில்...

தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவ கோப்ரல் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக தெரிவிக்கப் படுகின்றது. (ச–5)

## புலிகள்–கருணா பிளவுக்கு...

காரணம் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கருணா, தமிழீழ விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்தமையானது அவர்களின் உள்ளகப் பிரச்சினையாகும்.

அது தொடர்பில் தம்மீது குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அவ்வாறு சாட்சியம் இருக்குமானால், அதனை சமர்ப்பிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

திருகோணமலை மாவிலாறு பிரச்சினையே, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கான காரணமாகும். இந்நிலையில் இராணுவத்தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அரசாங்கத்தின் கட்டளைக்கிணங்கவே செயற்பட்டதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ச–5)

# நியாயமான முறையில் தேர்தலை நடத்தமுடியாத அபாய நிலை

## தேர்தல் ஆணையாளருக்கு ஐ.தே.க. கடிதம்

(கொழும்பு)

நியாயமான முறையில் தேர்தலை நடத்த முடியாத அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஊடாக தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறை மிகுந்த சூழ்நிலை, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஆகியவற்றை சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்தக் கூடிய சாத்தியம் கிடையாதென கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு நலன்புரி நிலைய மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது. வடக்கு நலன்புரி நிலைய முகாம்களில் எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

இராணுவம் மற்றும் பொலிஸாரின் விடுமுறைகளை தேர்தல் ஆணையாளர் ரத்து செய்துள்ள நிலையில் கட்சி சார்பின்றி செயற்பட்ட சில இராணுவ அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சமுர்த்தி அதிகாரிகளை அழுத்தங்களுக்கு உட்படுத்தி சமுர்த்தி பயன்பெறுவோரின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கப் பட்டு வருகின்றது.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு பொலிஸாரினால் முடியவில்லை. அவசர நிலைமையைக் கருதி இராணுவத்தினரிடம் பாதுகாப்புகடமைஒப்படைக்கப்படவேண்டும்எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச–5)

### கிறிஸ்மஸ் தீவு கிளர்ச்சியில் ஈடுபட்ட 11 இலங்கையருக்கு எதிராக குற்றச்சாட்டு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளில் கிளர்ச்சி நடத்திய 11 இலங்கையர்களுக்கு எதிராக பொலிஸார் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கையர்களுக்கு இடையில் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமில் மோதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## தேர்தல் வன்முறைச்சம்பவங்...

இலங்கையில் நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வன்முறைகளும் அதிகாரத்தில் உள்ளவர்களின் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துள்ளதாக தேர்தலை கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் அவ் அமைப்பின் திட்டப்பணிப்பாளர் சிறிதரன் சபாநாயகம் தெரிவித்துள்ளதாவது,

இதுவரை இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் எமக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் கொலைகள் மற்றும் தனிநபர்கள் மீதான தாக்குதல்கள், பொதுச் சொத்துக்கள் மீதான தாக்குதல்கள் காணப்படுகின்றன. அத்துடன் சட்டத்துக்கு புறம்பான வகையில் பிரசாரக் கூட்டங்கள் என்பனவும் நடத்தப்படுகின்றன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் பின்னர் இதுவரை 4 கொலைகள் இடம்பெற்றுள்ளன. ஜனநாயகத் தேர்தல் நடத்தப்படும் போது மனிதப் படுகொலைகள் இடம் பெறுவது பாரதூரமான விடயம். இது தொடர்பில் நாம் பல முறை எச்சரித்துள்ளோம்.

கடந்த 20 வருட காலமாக இடம்பெறாத தேர்தல் வன்முறைகள் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் இடம் பெறுகின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை என்றும் இவ் அமைப்பு கூறுகின்றது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது சில தேர்தல் தொகுதிகளில அதிகளவான வன்முறைகள் இடம்பெறக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான பகுதிகளில் நாம் வெளி நாட்டு கண்காணிப்புக்களையும் நடமாடும் கண்காணிப்பாளர்களையும் பயன்படுத்த தீர்மானித்துள்ளோம். அத்துடன் இவ் வன்முறைகள் இடம் பெறும் போதும் பொதுமக்களின் பாதிப்புத் தொடர்பில் கூடுதலான பாதுகாப்புக்களை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரையும் தேர்தல் ஆணையாளரையும் நாம் கேட்டுள்ளோம் என்றும் கூறினார். (ச–5)

MIS கணனிப் பயிற்சி நெறிகள்
100% Practical

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma in MS-Office
Diploma in Desktop publishing
Diploma in Hardware Technology
Certificate in Digital Video Editing
Certificate in Internet Technology

(O/L) பரீட்சையில் சித்தியடையாது வீட்டில் இருப்போருக்காக.

வசதியான நேரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

பயிற்சி நெறியின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

#74, Sabapathy Lane,Thalaiyaaly, Jaffna. TPNO:021 321 6083




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.